# "மக்களுடன் இணைந்து காங்கிரஸ் முன்னேற வேண்டும்" -இந்திரா

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 317
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 12 ஷவ்வால் 17 சனிக்கிழமை [27-12-69]

குறைந்த விலையில் சிறந்ததயாரிப்பு
புதுமுறையில் தயாரித்த
அழகிய கண்ணைக்கவரும்
வர்ணப்படங்களில்
**பொங்கல் வாழ்த்துக்கள்**
ஏராளமான சைஸ்களில்
விற்பனையாகிறது!
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கிடைக்கும்.
வி. பி. பி. ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
வெளியீடு:
**தமிழ்ப்பண்ணை
புத்தக நிலையம்**
193, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

பம்பாய், டிச. 26

''பாரத மக்களிடையே புதியஎழுச்சியொன்று ஏற்பட்டிருக்கின்றது. காங்கிரஸ்கட்சி மக்களுடன் இணைந்து செயற்பட தயாராகவேண்டும் இல்லையெனில் அது பின்தங்க நேரிடும்''

இவ்வாறு பிரதமர் இந்திராகாந்தி இன்று பம்பாயில் ஆஸாத் மைதானத்தில் ஆரம்பமானகாங்கிரஸ்கட்சியின் விஷயாலோசனைக்கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார், திருமதி காந்தி பேசுகையில் அடிக்கடி கூட்டத்தினர் கரஒலிஎழுப்பினர்கள்.

பம்பாயில் ஆரம்பமாகும் இந்த மாநாடு வரலாற்று சிறப்புடையது என்று திருமதி காந்தி வர்ணித்தார். மற்றவர்களைத் திட்டவேண்டாம். உருப்படியானகொள்கைகளை உருவாக்குங்கள் செயற்படுத்தமுடியாத திர்மானங்களை உருவாக்க வேண்டாம் என்று திருமதி காந்தி காங்கிரஸ்காரர்களைக் கேட்டுசகொண்டார்.

மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைநீக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று வற்புறுத்திய திருமதி காந்தி பொருளாதார, சமூக, அரசியல் கொள்கைகளை எதிர்ப்பவர்கள் எப்பொழுதுமே இருந்து வருகிறார்கள். அப்படியானவர்கள் இப்பொழுது கோஷ்டியாகக்கிளம்பி ஒரு சவாலாக இருந்துவருகிறார்கள் இவர்களில் முதலாளிகளும், சுயநலவாதிகளும், வகுப்புவாதிகளும் பத்திரிகைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள் என்றும் விளக்கினார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் முன்பதாக பேசிய இடைக்காலத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் ஜனநாயக, மதசார்பின்மை, சோஷலிஸம் ஆகியவற்றை ஆதரிப்பவர்கள் காங்கிரஸ் கொடியின்கீழ் ஒன்றுதிரள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ்கட்சியின் புதிய தலைவர் திரு. ஜெகஜீவன் ராம் கட்சிக்கொடியை ஏற்றி வைத்தார். வறுமையை ஒழித்து சமத்துவமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு திருமதி காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் முயற்சிசெய்யும் என்று அவர் அப்பொழுது குறிப்பிட்டார் காங்கிரஸ் கட்சி பம்பாயில்தான் உதயமாயிற்று வறுமையை ஒழிப்பதற்கான புதிய காங்கிரஸ் கட்சியும் இங்குதான் உருவாகின்றது என்றார் புதிய தலைவர்.

முன்பதாக திரு. ஜெகஜீவன்ராம் ஊர்வலமாகஅழைத்துவரப்பட்டார். லட்சக்கணக்கான மக்கள் இந்தஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

விஷயாலோசனைக் கூட்டத்தில் திரு. சவான் பேசுகையில், திரு. நிஜலிங்கப்ப வும் அவர் சகாக்களும் காங்கிரஸைப் பிளவுபடுத்தவேமுனைந்து வந்துள்ளனர். ஒற்றுமை ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லையென்றார்.

# 50 ஏக்கர் காணி தருகிறேன்; பளையில் பல்கலைக் கழகம் நிறுவுங்கள்


## உயர் கல்விச் சபை தலைவருக்கு புலோப்பளை கி. ச. தலைவர் மகஜர்

யாழ்ப்பாணம், சனி

**தமிழ்மக்களுக்கென அமைக்கவிருக்கும் பல்கலைக்கழகத்தை வடக்குக்கும் கிழக்குக்கும் பொதுவான கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பளைப் பகுதியில் அமைக்குமாறு தேசிய உயர் கல்விச் சபைத் தலைவர் திரு. ஜி. பி. மலலசேகராவுக்கு அனுப்பப்பட்ட மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த மகஜரை புலோப்பளைக் கிராம சபைத் தலைவரும், யாழ். மாவட்ட கிராம சபைத் தலைவர்களின் சமாஜத் தலைவரும், [illegible] மாநகரசபை உறுப்பினருமான திரு. ஏ. ஜி. ராஜசூரியர் திரு. ஜி. பி. மலலசேகராவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ்ச் சுக்கட்டு [illegible] ர் கிழக்கு மாகா...



...களுக்கு ஒரு பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலங்கையிலும் கிடைக்காமல் போவதிலும் பார்க்க அதனைப் பளையில் அமைப்பதே சிறந்தது என்றும் இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பளைப் பகுதியில் பல்கலைக்கழகத்தை அமைப்பதனால் அதற்கு 50 ஏக்கர் நிலத்தைத் தருவதற்கு தான் தயாராகவிருப்பதாகவும், இதுபற்றி தேசிய...

## நாகர்கோவில் மகாவித்தியாலய தீர்மானங்கள்

செம்பியன்பற்று, வெள்ளி

நாகர்கோவில் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கம் பொதுக்கூட்டம் அண்மையில் அதிபர் திரு. மு. கந்தையா தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

பாடசாலையின் வளர்ச்சியில் தாம் கொண்டுள்ள அக்கறையை நிறைவேற்றுவதற்கு பெற்றோரின்ஒத்துழைப்பும் அவசியம் என திரு. துரைரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார். விஞ்ஞான ஆய்வு கூடம், புதிய கட்டிடம் அமைத்தல் ஆசிரியர் பற்றாக்குறை முதலியன 1970ம் ஆண்டளவில் பெற்றுத் தருவதாக அவர் உறுதியளித்தார்.

6ம் வகுப்பிலிருந்து மாண...

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, சனி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 268-வது சுவீப்சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

1 ம் பரிசு
27 S 0896 ரூபா 100,000

2-ம் பரிசு
13 A 0965 ரூபா 40,000

3-ம் பரிசு
25 P 0869 ரூபா 10,000

தலா ரூபா 698.40 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 40 A 0373 | 12 L 0096 |
| 08 E 0256 | 26 U 0152 |
| 15 W 0827 | 06 D 0423 |
| 10 P 0909 | 24 S 0060 |
| 17 T 0555 | 22 T 0528 |
| 39 Z 0083 | 22 J 0158 |
| 37 T 0241 | 15 L 0295 |
| 28 Y 0734 | 29 P 0005 |
| 26 U 0979 | 02 P 0739 |

| | |
|---|---|
| 30 N 0902 | 29 L 0932 |
| 30 N 0606 | 26 B 0042 |
| 44 N 0757 | 12 K 0831 |
| 23 X 0860 | 41 H 0086 |
| 41 O 0011 | 04 Q 0104 |
| 20 M 0425 | 01 Y 0784 |
| 18 J 0022 | 41 P 0333 |
| 29 M 0451 | 27 G 0095 |
| 40 D 0793 | 27 R 0321 |
| 15 H 0742 | |
| 02 O 0102 | 15 P 0416 |
| 13 N 0454 | 23 Q 0418 |
| 22 D 0664 | 01 U 0902 |
| 31 P 0153 | 29 D 0357 |
| 40 P 0269 | 25 F 0235 |
| 27 U 0117 | 20 T 0031 |
| 41 X 0297 | 37 X 0385 |
| 41 G 0648 | 07 Q 0921 |
| 37 O 0769 | 41 P 0987 |
| 24 N 0769 | 39 M 0402 |
| 08 G 0735 | 13 W 0928 |
| 12 D 0521 | 01 K 0783 |
| 39 K 0187 | 43 R 0613 |

# வடக்கு, கிழக்கில் கடும்புயல் வீசும்

## மீனவர்க்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி

இன்று நண்பகல் 12 மணிவரை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடும் மழை, பெரும் புயற்காற்றுடன் பரவலாகப் பெய்யும் என்று இலங்கை அவதான நிலையம் நேற்றுக் காலை அவசர அவசரமாக அறிவித்தது.

இந்த அபாய அறிவிப்பை அனுசரித்து மீனவர்கள் எவரையும் மறுஅறிவிதல் வரை கடலுக்குச் செல்லவேண்டம் எனப் பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

நேற்று வங்காள விரிகுடாவிலிருந்து புறப்பட்ட பவன அமுக்கம் இலங்கையின் வடபகுதிக்குக் குறுக்கால் செல்லும் என்றும் இதனல் கடும் காற்று சூறுவளியாக மாறும் எனவும் இந்திய வானெலி அறிவித்தது.

மன்னார், காரைநகர் தீவுப்பகுதி, யாழ்ப்பாணம், காங்கேசன்துறையிலிருந்து கரையோரமாக பருத்தித்துறை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருமலை வரையுள்ள மீனவர்கள் எவரையும் மீண்பிடிக்கச் செல்லவேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முழுவதும் வடபகுதியின் பல இடங்களில் குளிர் காற்றுடன் கூடிய மழை பரவலாகப் பெய்தது.

இவ்வருடத்தில் இதுவரை 50 அங்குல மழை பெய்துள்ளதாக யாழ்ப்பாண அவதான நிலையத்தினர் நேற்றுப் பகல் தெரிவித்தனர். கடந்த வருடத்திலும் பார்க்க இது 30 அங்குலம் கூடியுள்ளதாகவும் அவதான நிலைய அதிகாரி ஒருவர் தகவல் கொடுத்தார்.

(கா. நி.

## தமிழ் வர்த்தக ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 08 E 0256 | 26 U 0152 | 27 U 0117 | 20 T 0031 |
| 15 W 0827 | 06 D 0423 | 41 X 0297 | 37 X 0385 |
| 10 P 0909 | 24 S 0060 | 41 G 0648 | 07 Q 0921 |
| 17 T 0555 | 22 T 0528 | 37 O 0769 | 41 P 0987 |
| 39 Z 0083 | 22 J 0158 | 24 N 0769 | 39 M 0402 |
| 37 T 0241 | 15 L 0295 | 08 G 0735 | 13 W 0928 |
| 28 Y 0734 | 29 P 0005 | 12 D 0521 | 01 K 0783 |
| 26 U 0979 | 02 P 0739 | 39 K 0187 | 43 R 0613 |
| 23 C 0875 | 34 A 0480 | 09 G 0506 | 04 U 0047 |
| 16 P 0900 | 37 M 0921 | 27 G 0260 | 08 T 0194 |
| 17 K 0076 | 06 R 0051 | 37 Y 0272 | 01 Z 0808 |
| 01 P 0170 | 27 P 0030 | 41 U 0438 | 22 J 0692 |
| 16 B 0967 | 27 E 0468 | 23 F 0070 | 12 H 0221 |
| 10 Y 0744 | 11 Q 0526 | 37 C 0723 | 22 M 0734 |
| 24 G 0107 | 18 C 0612 | 30 F 0527 | 18 L 0119 |
| 04 S 0806 | 19 B 0688 | 29 W 0091 | |
| 15 N 0181 | 06 O 0078 | | |
| 06 V 0304 | 08 X 0980 | | |
| 25 Q 0390 | 08 T 0751 | | |

(இவை உறுதிப் படுத்தப் படவேண்டும்)

# 1970-ம் ஆண்டு பட்ஜட்டில் சுமார் 4 லட்சம் ரூபா துண்டு

## நாளை மாநகரசபை விவாதம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகரசபையின் 1970ம் வருட பட்ஜட்டில் சுமார் நான்கு லட்சம் ரூபா துண்டுவிழுகிறதாம். இந்த பட்ஜட்டின் மீதான விவாதம் நாளை மாலை யாழ். மாநகரசபையில் நடைபெறும்.

இதற்கான விசேஷ கூட்டம் சபை மண்டபத்தில் மேயர் திரு. எஸ். நாகராஜா தலைமையில் நாளை மாலை 3-30 மணிக்கு நடைபெறும்.

மாநகரசபையின் 1970ம் வருட பட்ஜெட்டில் பொதுக் கணக்கு விபரத்தில் மூன்று லட்சத்து இருபதினாயிரத்து எண்ணூற்றி முப்பத்தாறு ரூபா பற்றுக்குறையும், மின்சாரக் கணக்கால் அறுபத்து ஆறாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறு ரூபாயுமாக மொத்தம் மூன்று லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து எழுநூற்றுத்தொண்ணூற்றி ஏழு ரூபா பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. (கா. நி)

ஒரு மாதமாகியும்

# ஆய்வுகூட ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் மாற்றமில்லை

யாழ்ப்பாணம், சனி

நாடுபூராவும் நடைபெற்று வரும் ஆஸ்பத்திரி ஆய்வு கூட ஊழியர்களின் வேலை நிறுத்தம் நேற்றுடன் ஒரு மாதம் முடிவடைந்தபோதும் நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி நோயாளிகள் பலர் இதனால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பல நோயாளிகள் இதனால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படாமலும் இருக்கின்றனர்.

ஆஸ்பத்திரிவெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த இரத்தம், சிறுநீர், மலம் சோதிக்கும் ஊழியர்களே சில முக்கிய வேலைகளை ஆய்வுகூடத்தில் தொடர்ந்து செய்துவருகின்றார்கள்.

இதனால் வெளி நோயாளர் சிகிச்சை நிலையப் பரிசோதனை அறை கடந்த 20 நாட்களாக மூடப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (கா. நி)

## கோதுமை மாவு தட்டுப்பாடு

கோட்டை, வெள்ளி

ஐக்கிய பண்டகசாலைகளெங்கும் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பழுதடைந்த மாமூடைகளுக்குப் பதிலாக புதிதான மூடைகளை உணவு இலாகா சேர்ப்பிக்காததே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த மாமூடைகள் பழுதடைந்துள்ளதனால் அவற்றை உணவுக்கு உபயோகிக்க முடியாமல் இருப்பதாகத் தெரிய வருகிறது.

உணவு இலாகா அதிகாரிகள் பண்டங்களை லஞ்சம் பெற்று விநியோகிப்பதாலும், இதனால் அதிக விலைக்கு விற்பனவு செய்யவேண்டி ஏற்படுவதுமே இதற்குக் காரணமெனப் பல யூனியன்கள் குற்றஞ்சாட்டியுள்ளன

ஆய்வு கூடம், புதிய கட்டிடம் அமைத்தல் ஆசிரியர் பற்றுக்குறை முதலியன. 1970ம் ஆண்டளவில் பெற்றுத் தருவதாக அவர் உறுதியளித்தார்.

6ம் வகுப்பிலிருந்து மாணவர்களிடம் வசதிக்கட்டணம் அறவிடுவதெனவும், நாகர் கோவில் தெற்கு அ மி த க. பாடசாலையை இவ் மகா வித்தியாலயத்துடன் இணைத்து நடத்த வழிவகுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திரு மு கந்தையா, திரு க ஆறுமுகம், திரு தி சந்திரசேகரம், திரு மு ச வல்லிபுரம், பிரமஸ்ரீ எம் சர்மா ஆகியோரைக் கொண்ட வெளிவிவகாரச் செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. திரு சர்மா நன்றியுரை கூறினார்.

## இலங்கை வீரர்களுக்கு டிப்ளோமா

பேர்லின், டிச. 26

இலங்கை விளையாட்டு வீரர்கள் மூவர் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் லயிப்பிச்சிலுள்ள விளையாட்டுக் கல்லூரியில் 8 மாதங்கள் பயிற்சிபெற்று டிபளோமா பெற்றனர். அவர்களுடன் பர்மா, இந்தியா உட்பட 12 ஆசிய, ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 78 விளையாட்டு வீரர்களும் இங்கு பயிற்சிக்குப் பின்னர் டிப்ளோமா பெற்றனர்.

ஒலிம்பிக் கொள்கையைப் பின்பற்றும் இக்கல்லூரி அபிவிருத்தியடையும் நாடுகளின் விளையாட்டு முன்னேற்றத்துக்காக பெரும் பணியாற்றுகிறது.

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் கிறிஸ்மஸ் தினத்தன்று 223 பேர் வெடிகாயத்துக்குள்ளானார்கள் இவர்களில் 40 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


## இன்று

யாழ்ப்பாணம், சனி

வண்ணை சிவன்கோவிலில் இன்றுமாலை 5 மணிக்கு காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனமகா சன்னிதானம் தலைமையில் சுகப்பிரம்மம் பிரம்மஸ்ரீ ராமஸ்வாமிசாஸ்திரிகள் 'திருநாவுக்கரசர்' பற்றிய உபந்நியாசம் நிகழ்த்துவார்.

...றுப்பினருமான திரு. ஏ. ஜி. ராஜசூரியர் திரு. ஜி. பி. மலலசேகராவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தமிழரசுக்கட்சியினர் கிழக்கு மாகாணத்திலும், தமிழ்க்காங்கிரஸ்கட்சியினர் யாழ்ப்பாணத்திலும் அமைத்துத் தருமாறு கேட்டதற்கு ஒரு நடுநிலைமை காணும் வகையில் பளைப் பகுதியில் அமைப்பதே பொருத்தமானதென்று இம்மகஜரில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இரு தமிழ்க் கட்சிகளின் இழுப்பறியால் தமிழ் மக்...

...பட்டுள்ளது.

பளைப் பகுதியில் பல்கலைக் கழகத்தை அமைப்பதனால் அதற்கு 50 ஏக்கர் நிலத்தைத் தருவதற்கு தான் தயாராகவிருப்பதாகவும், இதுபற்றி தேசிய உயர் கல்விச் சபையின் முன் சாட்சியமளிக்கத் தாம் தயாராகவிருப்பதாகவும் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் திரு. மலலசேகராவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளார். (கா. நி.)

# கம்பஹா காலியிலும் ரயில்கள் தடம்புரண்டன: மழை காரணம்

## மட்டுநகர் விபத்து பற்றி விசாரணை

கோட்டை, சனி

மாகோவிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்த ரயில் நேற்று முன்தினம் காலை தடம் புரண்டதையடுத்து மேலும் இரண்டு ரயில்கள் தண்டவாளத்தை விட்டு விலகி தடம் புரண்ட சம்பவம் மற்றிரு இடங்களில் நடைபெற்றது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் ஒன்று கம்பஹாவுக்கு அருகிலும் ஜின்தோட்டையிலிருந்து காலிக்குச் சென்ற ரயில் ஒன்று காலிக்கருகாமையிலும் தடம் புரண்டன.

மட்டக்களப்பு ரயில் தடம்புரண்டது பற்றி புகையிரதப் பகுதியினர் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு ரயில் சேவை நேற்று ஹிங்குராகொடை வரையுமே நடைபெற்றது. அங்கிருந்து மட்டக்களப்புககுச் செல்ல பஸ்சேவை நடைபெற்றது.

கம்பஹா, காலி, ரயில்கள் தடம்புரண்டதால் யாரும் காயமடையவில்லை. மழை காரணத்தாலேயே இவ்வாறு நேர்ந்ததாகப் புகையிரதப் பகுதியினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ரயில்தடம் புரண்டதில் காயமடைந்த மூவரும் மாகோ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீடு தீப்பற்றியதால்

# 12 வயதுச் சிறுமி, 3 மாதக் குழந்தை பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், சனி

வீடு தீப்பற்றி எரிந்ததால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமியும் மூன்று மாதக் குழந்தையும் எரிகாயங்களுக்குட்பட்டு மரணமான பரிதாப சம்பவம் துன்னாலை தெற்கில் நடைபெற்றது

இரண்டு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற இவ் விபத்தில்சிக்கிய அழகு தங்கமணி என்ற மூன்று மாதக் குழந்தை நேற்று இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானது இது சம்பத்தமான மரண விசாரணை நேற்றுக்காலை நடைபெற்ற இரு மணி நேரத்தின்பின் எரிகாயத்துக்குள்ளான மற்றவரான 12 வயதுச் சிறுமி மாணிக்கம் தெய்வானையும் மரணமானார்

இரண்டு மரணங்கள்பற்றியும் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு என் இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினர்

மரணமான குழந்தை தங்கமணி, மரணமான மற்றச் சிறுமியான தெய்வானையின் அக்காவின் மகளாவர் சம்பவம் நடந்த போது குழந்தையின் தாயார் கக்கூசுக்குச் சென்றுவிட்டதாகவும், சிறு குழந்தை மண்ணெண்ணை விளக்கை தட்டி வீழ்த்தியதால் வீடுதீப்பற்றி எரிந்ததாகவும், இதனால் சிறுமியும், குழந்தையும் எரிகாயங்களுக்குள்ளானதாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது

டாக்டர்களின் சாட்சியங்களும் பதிவுசெய்யப்பட்ட பின் எரிகாயங்களால் ஏற்பட்ட விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (கா. நி)

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழைப் பகுதியில் திருவாதிரை விழாவும், கிறிஸ்மஸ் விழாவும் ஒரே நாளில் பெருவிழாவாக நடைபெற்றது.

## சென்னை கலைவிழா

### இன்றைய நிகழ்ச்சி

சென்னை, டிச 27

சென்னையில் நடைபெறும் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்.

பி. ச. 3-30 கே. சி. சுப்பிரமணியம்- பாட்டு; பி. ப. 6-00 ராதா, ஜெயலஷ்மி- பாட்டு; 9-30 ராஜம்- பாட்டு.

மியூசிக் அக்கடமி சார்பில் அக்கடமி மண்டபத்தில்.

பி. ப. 1-30: ஜெயலஷ்மி சந்தானம் பாட்டு; பி. ப. 3-00 ஸ்ரீமதி கமலா மூர்த்தி கதாகலாட்சேபம். பிப. 5-30 எம். எல். வசந்தகுமாரி பாட்டு, 8-30 ஏம்பார்விஜயராகவச்சாரியார் கதாகாலாட்சேபம் (இமை. நி)

...குக் குறுக்கால் செல்லும் என்றும் இதனால் கடும் காற்று சூறுவளியாக மாறும் எனவும் இந்திய வானொலி அறிவித்தது.

இது 30 அங்குலம் கூடியுள்ளதாகவும் அவதான நிலைய அதிகாரி ஒருவர் தகவல் கொடுத்தார். (கா. நி.

# தமிழ் வர்த்தக ஆசிரியர் புறக்கணிப்பா?

## கல்வி அமைச்சருக்கு மகஜர்

பருத்தித்துறை, வெள்ளி

'அண்மையில் வெளிவந்த கசெற் பத்திரிகையில் வர்த்தகக் கல்வி போதிப்பதற்குச் சிங்கள வர்த்தக ஆசிரியரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தமிழ்மொழியில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்துபயிற்சிபெற்றுவெளியேறியவர்களும், க. பொ த. (உயர்தர) வகுப்புக்குப் போதிக்கக்கூடிய தகைமை வாய்ந்த வர்த்தகப் பட்டதாரிகளும் தொழில் வசதியின்றி இருக்கிறார்கள். இவர்களுக்கும் இவ்வித வேலை வாய்ப்புகளை அரசாங்கம் அளிக்க முன்வரவேண்டும்.'

இவ்வாறு அகில இலங்கை வர்த்தக சங்கச் செயலாளர் இன்று கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலைக்கும், உபசாநாயகர் திரு. எம். சிவசிதம்பரத்திற்கும் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாகின்றது !

1970

"ஈழநாடு" தினக் குறிப்பு

விலை: ரூ. 1-35 சதம்

"ஈழநாடு" Pocket Diary

விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!
நவீன அமைப்பு!!

எமது பத்திரிகை விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

யாழ். வைத்தியசங்கத்திற்கு ஒரு நூலக உதவியாளர். ஆங்கில அறிவில் தேர்ச்சி அவசியம். தட்டெழுத்து அனுபவம் உடையோர் விரும்பப்படுவர். சம்பளம் 75 — 90 ரூபா, டாக்டர் மு. சண்முகதாசா, அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 2-1-70க்கு முன் விண்ணப்பிக்கவும். 1730

## கல்வி

மெக்கானிக் போதனையும், பயிற்சியும்:

எமது 8-வது பருவ முழுநேர (போதனை-செய்முறை) மோட்டார், டிராக்டர், டீசல் மெக்கானிக் டிப்புளோமா பயிற்சி வகுப்புக்கள் 23-1-70ல் ஆரம்பமாகவிருக்கின்றது. சேரவிரும்புவோர் 15-1-70க்கு முன் முழு விபரம் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை நேரிலோ அல்லது கடிதமூலமோ பெற்றுக்கொள்ளலாம். அதிபர், ஸ்ரீமுருஜ் ஒட்டோமொபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை மாடி, 11/A, 11/B, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1731

## விற்பனைக்கு

புத்தொளியின் அப்பலோ 11, 12 வெளிவந்துவிட்டது. விலை சதம் 60 விபரங்களுக்கு ச. கிருஷ்ணசாமி, 33, பெரியகடை, யாழ்ப்பாணம். தமயந்தி பதிப்பகம், அச்சுவேலி. 1732

சாக்கு

காங்கேசன்துறை ப.நோ.கூ. சங்கத்தில் இருக்கும் நல்ல ரக வெற்றுச்சாக்குகளை 28-12-69 மாலை 5-00 மணிக்கு சங்கத்தில் வைத்து விற்கப்படும். வேண்டுபவர்கள் உடன் பணம் செலுத்தி சாக்குகளை அப்புறப்படுத்த வேண்டும். சு. பூதப்பிள்ளை கௌரவ காரியதரிசி. 1734


## ஸ்பேஸ் வெற்றி

பருத்தித்துறை, வெள்ளி

வதிரித் தமிழ் மன்றத்தின் ஆதரவில் செல்வன் ஆ. கந்தசாமி ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ... வல்வெட்டித்துறை கோஷ்டிக்கும், நெல்லியடி ஸ்பேஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் ஸ்பேஸ் கோஷ்டி 4—1 கோல்களால்


## அறிவித்தல்

30 வருடகாலம் தங்கள் சேவையிலிருக்கும் சன்லைட் டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ் ஸ்தாபனத்தை மறந்துவிடாதீர்கள்.

பட்டு உடைகளை றைக்கிளீன் செய்வதிலும் சாயம் போடுவதிலும் வட இலங்கையில் மிகத் தேர்ச்சிபெற்றவர்கள்.

பஸ்நிலையப் பக்கம்.

பெரியகடை- யாழ்ப்பாணம்

போன்:474

தந்தி: றைக்கிளீன்

1893


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 27—12—69

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர்விருந்து, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வீணை, 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

பருத்தித்துறை, வெள்ளி

வதிரி தமிழ் மன்றத்தின் ஆதரவில் ஆ. கந்தசாமி ஞாபகார்த்த வெற்றிக் கோடயத்திற்கான இறுதி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாதம் 31-ம் திகதி பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கும் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம், வெற்றியீட்

## 'எல்லாவற்றையும் நிறைவேற்றக்கூடியவர்'

சுழிபுரம், வெள்ளி

"'நால்வர் பெருமைக்கு நாம் செய்யும்தொண்டு திருநீற்றைப் பரப்புதலாகும். பெண், பொன், மண் ஆகிய மூன்று ஆசைகளையும் நீக்கி என்றும் நிலையான பேற்றைத்தரக்கூடியதான இறைவனின் திருநாமங்களே எமக்கு வேண்டியவையாகும் எம்செயல்ஆவது ஒன்றும் இல்லை எல்லாம் இறைவன் செயல். எல்லாவற்றையும் நிறைவேற்றக் கூடியவன் இறைவனே. அவனுடைய அருளைப்பெற்றவர்கள் இம்மைமறுமைக்கு வேண்டிய எண்ணற்ற காரியங்களைப் பெற்றுக்கொண்டமையை நாம் அவரவர் சரிதைகள் வாயிலாக அறியமுடிகின்றது

இவ்வாறு காஞ்சீபுரம் மெய்கண்டார் ஆதீனகுரு மகாசன்னிதானம் வட்டுக்கோட்டை மூன்றும்பனை வயிரவர்கோவில் முன்றலில் நடைபெற்ற சமய விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் மகாசன்னிதானம், சுவாமிநாதத தம்பிரான், சுகப்பிரம்மம் ஆகியோர் ஊர்வலமாக வட்டுக்கோட்டை ஊர்மன்ற சந்தியிலிருந்து திருஞானசம்பந்தர் வீதி வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர். வழிநெடுகிலும் பூரண கும்பம்வைத்து மாலைகள் அணிவிக்கப்பட்டன. திரு. இ. ஆனந்தராசா வரவேற்புரை நிகழ்த்தினர். ஈழம் வருகைதந்த மெய்கண்ட ஆதீனகுரு மகாசன்னிதானம், சுகப்பிரம்மம் ஆகிய இருவரையும் நல்லைநகர் சுவாமிநாதத் தம்பிரான் அறிமுகம் செய்து வைத்தார்.

சுகப்பிரம்மம் எனப் பட்டம் சூட்டப்பட்ட அம்பாசமுத்திரம் பிரம்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் 'நால்வர்கள் காட்டிய நன்னெறி' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினர்.

## கோரிக்கை கிடையாவிடில் தேர்தலில் போட்டியிடுவராம்

யாழ்ப்பாணம், சனி

ஆட்சிமன்றம் கலைக்கப்படுமுன்னர் எங்கள் பிரச்னை தீர்க்கப்படாவிடில் வட பகுதியில் சில தொகுதிகளில் அடுத்த தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவோம். நல்லூர் தொகுதியில் ஒரு அபேட்சகரை நிறுத்த் எமது சங்கம் ஏற்கனவே முடிவு செய்துள்ளது.

சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த அரசாங்க ஊழியர் சங்கச் செயலாளர் திரு. மு. மகாலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

திரு. மகாலிங்கம் மேலும் கூறியதாவது:

நமது கோரிக்கைகளை அரசாங்கம் தட்டிக் கழித்து வருகிறது. மேலதிகமாக 5 வருடம் நமது பென்சனில் சேர்க்கப்படவேண்டும். என்பதே நமது கோரிக்கையாகும். எமது கோரிக்கைகளில் போதிய நியாயமிருந்தும் பிரதமர் அதனை ஏற்கவோ, நிராகரிக்கவோ இல்லை. ஆட்சி மன்றம் கலைக்கப்படு முன்னர் எங்கள் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் வட பகுதியில் போட்டியிடுவோம்.

அரசாங்கம் இன்றுள்ள நிலையில் எங்களுக்கு பூரண நஷ்டஈடு தர கடமைப்பட்

## ஒளிபெறும்

யாழ்ப்பாணம், சனி

நாவற்குழி வீதிகள் விரைவில் ஒளிமயமாகவிருக்கிறது இதற்கான நடவடிக்கையை நாவற்குழிகிராமசபை மேற்கொண்டுள்ளது

வீதிகளுக்கு மின்சார வெளிச்சம் போடும் வேலைகள் அடுத்த வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படுமென கிராமசபைத் தலைவர் திரு. சோ. சடாட்சரம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.


வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க


## இன்றைய பலன்

மார்கழி மாதம் 12-ம் திகதி [27-12-69]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** கடன் தொல்லைகள் கட்டுபடியாகும். தொழில்துறையில் வருவாய் அதிகரிப்பதற்கு இடமுண்டு. உணவு விடுதிகள் நடத்துபவர்களுக்கு உற்சாகமான தினம். வீட்டிலும் வேற்றுமைகள் மறையும்.

**ரிஷபம்-** செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். உறவினர் ஒருவருக்கு உதவி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம். உடல்நலத்திலும்முன்னேற்றம் காணப்படுகின்றது. நல்ல தினம்.

**மிதுனம்-** வாழ்க்கையே ஒரு புதிராகத் தோன்றும். செலவினங்கள் உச்சக் கட்டத்தை அடையும். புதிகாக எதையும் ஆரம்பியாதிருப்பது நன்று. குடும்பத்தில் சந்தேகம் தலைதூக்காது பார்க்கவும்.

**கடகம்-** இன்னலின் பின்னலால் வேதனைப்படுவீர்கள். நீண்டகாலத் தொடர்பொன்று இன்று துண்டிக்கப்படலாம். அவசர முடிவுக்கு வராது நன்ருகச் சிந்தித்த பின்பு செயலாற்றவும். சுமாரான தினம்.

**சிம்மம்-** வார்த்தைஜாலம் செய்வதில் வல்லவராகக் காட்சியளிப்பீர்கள். பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு. துரித வேகத்தில் ஒரு சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்படலாம் சுவையான நிகழ்ச்சியும் உண்டு.

**கன்னி-** கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. முயற்சி முழுப்பலனையும் அளிக்கும். புதிய ஒப்பந்தமொன்று இன்று கைச்சாத்திடப்படலாம். பூமிப் பிணக்கில் சமரசம் உண்டு.

**துலாம்-** சுவையான சம்பவங்கள் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதையும் ஒழுங்குமுறையாகச் செய்வதில் திருப்தியடைவீர்கள். பெற்ரோரின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் பிள்ளைகள் நடப்பர்.

**விருச்சிகம்-** சூதாட்டத்தின் மூலம் பெருந்தொகையை இழக்க நேரிடலாம். நண்பர்களுடனும் பகைத்துக்கொள்வீர்க்ள். மதுபானத்தைத் தவிர்த்து மனக்கட்டுப்பாட்டுடன் இருக்கவும்.

**தனுசு-** புதிய எண்ணங்கள் தலைதூக்கும். சுற்றுடலில் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு. கழுகுப்பார்வை செலுத்தியவர்கள் கைகொடுத்து உதவுவார்கள். அவசரச் செய்தியொன்று சிந்தனையைத் தூண்டும்.

**மகரம்-** பயன்தரும் திட்டங்களில் கவனம் செலுத்தப்படும். நீண்டநாள் மூடுமந்திரமாக இருந்த ஒரு உண்மை இன்றுஅம்பலத்துக்கு வரலாம். நிலைமையைச் சமாளிப்பதில்வெற்றிக்கு இடமுண்டு.

**கும்பம்-** சங்கடங்களின் மத்தியில் சஞ்சலப்படுவீர்கள். உங்கள் பலவீனத்தை மற்றவர்கள் ஆயுதமாகப் பயன்படுத்த முனைவர். மனத்திடமிருப்பின் இவர்களை வீழ்த்திவிட முடியும் துணிவே துணை.

**மீனம்-** விளையாட்டுப் பிள்ளையாக இருக்க விரும்புவீர், உமது விசித்திரப் போக்கு மற்றவர்களுக்குவேடிக்கையைத் தரலாம். சமயோசித புத்தி நன்மையைத் தரும். இன்று நீர் கவலையில்லாத மனிதன்.

## பிரமாண்டமான விஷ்ணு சயன திருவுருவ விக்கிரகம்

### பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் பிரதிஷ்டை

மாவிட்டபுரம், வெள்ளி

வடபகுதியிலுள்ள எந்த ஆலயத்திலும் இல்லாத பிரமாண்டமானதும், சிற்ப வேலைகள் அமைந்ததுமான விஷ்ணு அனந்தசயன திருவுருவ விக்கிரகம்ஒன்றுஅடுத்த மாதம் பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள், ஆலயகுரு பிரம்மஸ்ரீ ச. சுப்பையாக்குருக்களுக்குக் கனவில் தோன்றித் தனது ஆனந்தசயன திருக்கோலத்தைக் காட்டி அத்தோற்றத்தை அவ்வாலயத்தில் அமைக்கும்படி கட்டளையிட்டதாகவும் அதை மேற்படி குருக்கள் பல பேரன்பர்களின் உதவியுடன் நிறைவேற்றியுள்ளதாகவும்சொல்லப்படுகிறது.

இத் திருவுருவத்தை மாவிட்டபுரத்தில் தங்கியுள்ள தமிழக சிற்பாசாரியாரான உயர்திரு பெரியசாமி ஸ்தபதியார் கருங்கல்லில் சாத்வீக முறைப்படி அமைத்துள்ளார்.

இத்திருவுருவ உலா அடுத்த மாதம் 9-ம் திகதி மாவிட்டபுரத்திலிருந்து புறப்பட்டு சுன்னுகம், கர்த்ரோடை, சங்கானை வழியாக சித்தங்கேணி, பண்ணுகம், வழக்கம்பரை, சுழிபுரம். தொல்புரம், மூளாய் வழியாக பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவிலை வந்தடையுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

பெர்லின், டிச.26

அடுத்த மே மாதத்தில் ஆசிய நாடுகளின் கருத்தரங்கு ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது அண்மையில் மங்கோலியத் தலைநகரான உலான்பட்டோரில் கூடிய இலங்கை, இந்தியா, நேப்பாளம், மங்கோலியா சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் பௌத்தப் பிரதிநிதிகள் இக் கருத்தரங்கை நடத்துவதென்று முடிவு செய்தனர்.

ஆசியாவில் சமாதானத்துக்காக நடத்தும் போராட்டத்தைத் தீவிரப்படுத்துதல் வியட்நாம் மக்களுக்கு ஒத்துழைப்பு அளித்தல் முதலியவை இக்கருத்தரங்கில் விவாதிக்கப்படும்.


நத்தார் — புதுவருட மகத்தான


மலிவு விற்பனை

16—12—69 தொடக்கம் 5—1—70 வரை

பாதரட்கைஷ விற்பனையாளர்கள்

பிரகாஸ் ஸ்ரோர்ஸ்

31-33, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

நடாத்தப்பட்டுவரும் உதை
பந்தாட்டச் சுற்றுப்போட்டி
யில் [illegible] வல்வெட்டித்துறை
கோஷ்டிக்கும், நெல்லியடி
ஸ்பேஸ் கோஷ்டிக்குமிடை
யில் நடைபெற்ற உதைபந்
தாட்ட போட்டியில் ஸ்பேஸ்
கோஷ்டி 4—1 கோல்களால்
வெற்றிபெற்றது. எம். சிறீ
தரன், கே. சிறீதரன், எஸ்
தவராசா சரத் ஆகியோரின்
ஆட்டம் பாராட்டப்பட்
டது. திரு. எஸ். சிவதயா
பரன் மத்தியஸ்தராகக் கட
மையாற்றினர்,

உதைபந்தாட்டச் சுற்றுப்
போட்டி இம்மாதம் 31-ம்
திகதி பிற்பகல் நடைபெற
விருக்கிறது.

இதில் பிரதம விருந்தின
ராகக் கலந்து கொள்ளவிருக்
கும் உபசபாநாயகர் திரு.மு.
சிவசிதம்பரம், வெற்றியீட்
டும் கோஷ்டிக்கு வெற்றிக்
கேடயம் வழங்குவாரென
வும், பாங்கொக் சென்று
மீண்ட உதைபந்தாட்ட
வீரர் சிலரும் இப்போட்டி
யில் கலந்து கொள்வாரென
வும் அறியப்படுகிறது.

மன்றம் கலைக்கப்படு முன்
னர் எங்கள் பிரச்னை
தீர்க்கப்படாவிட்டால் வட
பகுதியில் போட்டியிடு
வோம்.

அரசாங்கம் இன்றுள்ள
நிலையில் எங்களுக்கு பூரண
நஷ்டஈடு தர கடமைப்பட்
டுள்ளது. எமது குறைந்த
பட்சக் கோரிக்கையைக்கூட
அரசாங்கம் தட்டிக்கழித்து
வருகிறது.


**ராணி** (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
# அடிமைப்பெண்

3வது வெற்றி வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
**கிங்ஸ்லி** [கொழும்பு]
**பிளாஸா** [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
# திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 3 காட்சிகள்
சந்திரபாபு-எம். ஆர். ராதா
நடித்த
**கவலையில்லாத மனிதன்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
**காவல் காரன்**


**மனோகரா**
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா
நடித்த
**அடிமைப்பெண்**

வல்வெட்டித்துறை
**ரஞ்சனா தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - சாவித்திரி
நடித்த
**மகாதேவி**

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நடித்த
**மகாதேவி**
(புதிய கொப்பி)

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
**கணவன்**


**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Footprint on the moon
APPOLLO-11
(color)





பூவுலகின் எத்திசையிலும், லான்ட்மாஸ்டர் 150 ஒன்று
நிச்சயமிருக்கக் காண்பீர்கள். பலமானது
நம்பிக்கையானது-அமோக பணிகள் பல புரியவல்லது,
நானிலமெங்கும் பரவிய சேவை வசதிகள் கொண்டது.
இத்தகைய தகுதிகள் கொண்ட வலிமிகு பணியாளியின்
உருவாக்கம் ஓர் இலங்கையரையே சாரும். ஆசிய
நிலைமைகளை மனதிற் கொண்டு உருவான இவ்வுயர்
படைப்பு இலங்கையில் 2000 த்திற்கும் அதிகமான
விவசாயிகளால் பாவிக்கப்படுகிறது. நாடெங்கிலும், பயிற்சி
பெற்ற, வேண்டிய உபகரணம் கொண்ட, சேவை நிலையங்கள் உதவி
பின் கொண்டது. உங்கள் தேவைகளுக்குத்தக்கதாக
வேண்டிய மேலதிக உபகரணங்கள், உறுப்புக்கள் வசதியும்
கொண்டது லான்ட்மாஸ்டர்.
லான்ட்மாஸ்டர் 150, இலகுவாகச் செலுத்தக் கூடியது.
வேண்டியபோது உழுதலைக் கூட்டலாம்.
உங்கள் வருவாய்க்குத் தகுந்த இலகுவான
பணக் கட்டண வசதிகள் உள்ளன.



நி...ரயறுத்தும் சுற்றிகள்
உருளைக்கிழங்கு, கரும்பு
நிரையறுத்தல் மாற்றக்
கூடிய அளவுகளில்



குழாய் மணிக்கு 6000
கலன் இறைக்கவல்லது.
தூவல், நிமித்தல் நீர்ப்
பாய்ச்சலுக்குச் சிறந்தது.



நிலையான நிரைவெட்டி
உழுசாலை 12"—18"
நிரையறுக்கவும் வித்து
பந்தியை ஆயத்தப்படுத்
தவும் மாற்றக்கூடியது.

# லான்ட்மாஸ்டர் 150 மாநிலத்தின் வலிமைமிகு தொழிலாளி

பிரவுண்ஸ் குறூப் இன்டஸ்ரீஸ் லிமிட்.
BG லான்ட்மாஸ்டர் 150
அத்திடிய வீதிக்கு அப்பால், இரத்மலானை. டெலி: 71-478

[GRANT 429125]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு ஏவாயுதத் தளங்களை இஸ்ரேல் நிர்மூலமாக்கியதாம்

## சூயஸ்கால்வாய்க்கு குறுக்கே எட்டுமணிநேரம் கடும் தாக்குதல்

டெல் அவிவ், டிசம்பர் 26

**ஐக்கிய அரபுக் குடியரசு ஏவாயுதத்தளங்கள் பலவற்றை இஸ்ரேல் விமானங்கள் தகர்த்தெறிந்துள்ளன.**

**சூயஸ் கால்வாயின் ஓரமாக 40 மைல் சுற்றுவட்டத்தில் அமைந்திருந்த ஐக்கிய அரபுக்குடியரசின் ஏவாயுதத் தளங்கள் எல்லாவற்றையும் நிர்மூலமாக்கிவிட்டதாக இஸ்ரேலியர் அறிவித்தனர்.**

இஸ்ரேலிய விமானங்கள் அலை அலையாக சூயஸ்கால்வாயின் குறுக்கே பறந்து ஐக்கிய அரபுக்குடியரசின் ராணுவ, ஏவாயுதங்கள் மீது குண்டு வீசியதாகவும் எல்லா ஏவாயுதங்களையும் அழித்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. எட்டு மணி நேரத்திற்கு மேல் இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல்களை நடத்தினவாம். 1967-ம் ஆண்டுச் சண்டைக்குப்பின்னர் நடைபெற்ற மிக நீண்ட நேர விமானத் தாக்குதல் இதுவென்று கருதப்படுகின்றது.

தாககுதலிலீடுபட்ட இஸ்ரேலிய விமானங்கள் நான்கைச் சுட்டுவீழ்த்தியதாக அரபுக்குடியரசு அறிவித்தது. இரண்டு விமானங்கள் ஆகாயத்திலேயே வெடித்து விழுந்ததாகவும் ஒரு விமானம் விழுந்து நொறுங்கியதாகவும் மேலும் ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாகவும் அவர்கள் அறிவித்தனர். ஆனால் தாக்குதல்களில் ஈடுபட்ட தங்கள் விமானங்கள் யாயம் பத்திரமாகத் திரும்பிவிட்டதாக இஸ்ரேலியர் கூறினார்கள்.

நேற்றிரவு ஜோர்டான் பள்ளத்தாககில் ஜோர்டான் நிலைகள் மிதும் இஸ்ரேலியர் தாக்குதல் நடத்தினார்கள். இஸ்ரேலிய நிலைகள் மீது அரபுக் கொமாண்டோக்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

# புதிய அரபுக்கூட்டுக்கு நாஸர் முயற்சி

ரபாத்தில் நடைபெற்ற அரபுத்தலைவர்களின் மாநாடு தோல்வியடைந்துவிட்டதால் புதிய அரபு அதிபர் கூட்டொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் நாஸர் முயற்சி எடுத்துவருவதாகத் தெரிகின்றது

அரபுக்குடியரசுத் தலைவர் அப்துல் நாஸரும் சூடான் அதிபரும் இது விஷயமாக லிபியா அதிபருடன் ஆலோசனை கலப்பதற்காக திரிப்பொலிக்குப் போயிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் அல்ஜீரிய அதிபர் பூமதியானுடன் ஆலோசனை கலந்திருக்கிறார்கள்,

## நெரிசலில் 27 பேர் பலி

லண்டன், டிச. 26

கொங்கோவில் காற்பந்தாட்ட நிகழ்ச்சி ஒன்றைப்

## மதுரை

## மீனாட்சி அம்மன் கோயில்

## ‘கல்வியும் சமயமும் இரு கண்கள்’

முள்ளியவளை. வெள்ளி

‘சமயமும் கல்வியும் சமுதாயத்தின் இரு கண்கள். கல்வியைப் புறக்கணித்துச் சமயம் வாழமுடியாது’ என முள்ளியவளைச் சைவநெறிக்கழகத்தினர் கல்யாண வேலவர் ஆலயத்தில் திருவாதிரை நாளன்று நிகழ்த்திய மணிவாசகர் விழாவில் திரு. அ. செல்வரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார். பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் விழா நடைபெற்றது. செல்வன்கள் ச. சந்திரபாலன், சி. தெய்வேந்திரம்பிள்ளை, இ. சிவலிங்கம், க. கந்தசாமி ஆகியோரும் பேசினர். செல்வி மதவமணி, செல்வன் இ. கணேசன் ஆகியோரின் இன்னிசையும் இடம்பெற்றது.

—— ——

## தானியப் பொருட்கள் இறக்குமதி

கோட்டை, வெள்ளி

பயறு, பருப்புவகைகள், கடலை முதலிய தானியவகைகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதிக் கோட்டா வெகுவிரைவில் அரசாங்கத்தால் வழங்கப்படவிருக்கிறது. இத்தானியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தனியார்துறையினருக்கு ஒரு கோடி 50 லட்சம் ரூபா வெளிநாட்டுச் செலா

# நவ பாரதம்

டிசம்பர் 26

### சின்டிகேட் திட்டம்

இந்தியப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு இடைத்தேர்தல் நடைபெறுமானால் பிரதமர் இந்திராகாந்திக்கு எதிராக மறைந்த பிரதமர் சாஸ்திரியின் மனைவி லலிதா தேவியை நிறுத்த சின்டிகேட் காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது. சாஸ்திரியின் மகன் அரிகிருஷ்ணனும் சின்டிகேட் ஆதரவாளர் என்பது தெரிந்ததே.

0 0 0

### முதலமைச்சர் எச்சரிக்கை

கேரள இடதுசாரி கம்யூனிஸ்டுகள் நிலத்தை ஆக்கிரமிக்கும் திட்டம் என்ற பெயரில் எல்லா உப நிலங்களையும் தங்கள் கட்சிப் பிரமுகர்களுக்கு ஒதுக்கத்திட்டமிட்டிருக்கிறார்களென்றும் இவர்களுடைய திட்டம் ஒன்றுமறியாத நிலமற்ற ஏழை மக்கள் தங்களுக்குரிய நியாய பூர்வமான பங்கைக்கூட பெறமுடியாமல் தடுத்து விடுமென்றும், இத்திட்டம் அரசாங்கத்திற்கு எதிரானதுமட்டுமன்று அனைத்து தொழிலாளர் விவசாயிகளுக்கு எதிரானதென்றும் கேரளமுதலமைச்சர் ஓர் அறிக்கையில் எச்சரித்திருக்கிறார்.

0 0 0

### ராஜாஜிமகன் குற்றச்சாட்டு

‘பிரதமர் இந்திரா தனது விருப்பப்படி, ஆட்சி நடத்தாமல், சவான் சுப்பிரமணியம், போன்றோரின் விருப்பங்களுக்கு கட்டுப்பட்டு. எதிர்க்கட்சிகளின் தயவுடன் தா[illegible] ஆட்சியை நடத்திவருகிறார். என ராஜாஜியின் மகன், திரு. நரசிம்மன், தனது தந்தையின் பிறந்தநாள் [illegible] மொன்றில், [illegible] அ[illegible] மேலும் இந்திராவின்

### பத்மாவதி பதவிஏற்பு

முகையூர் இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற தி.மு.க. வேட்பாளர் பத்மாவதி சபாநாயகர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். பதவிஏற்பு வைபவத்தில் முதலமைச்சர் மு.கருணாநிதியும் மற்றும் அமைச்சர்கள் சத்தியவாணிமுத்து, சண்முகம், மாதவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## கல்வி பாதிக்கப்படும்

யாழ்ப்பாணம், சனி

‘‘வடபகுதி தமிழ் மக்களின் கல்விவளர்ச்சியை தடைசெய்வதற்கு அரசாங்கம் மறைமுகமாக பல சூழ்ச்சிகளை கையாண்டு வருகிறது. இச் சூழ்ச்சிகளை எதிர்த்து போராடவேண்டியது ஆட்சிமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும்.’’

மிருசுவில் சந்தைதைமைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணிக் கூட்டத்தில் முன்னாள் எம். பி. திரு. வி. குமாரசாமி பேசும்போது கூறினார்.

திரு. ஏ. டி. பொன்னுக்கோன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. வி. குமாரசாமி மேலும் கூறியதாவது: வடபகுதியில் பல பாடசாலைகளுக்கு அதிபர்கள், தலைமை ஆசிரியர்கள் இல்லை. விஞ்ஞான கூடங்களும் பட்டதாரிஆசிரியர்களும் இல்லை. பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின்னர் தான் இந்த நிலைமை எழுந்துள்ளது இந்தநிலைமை நீடி[illegible]ால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும்.

திருவாளர்கள் எஸ். பி. [illegible] ஈ. கே. ராஜ[illegible]ன் பண்டிதர் பி. எம். ஞானப்பிரகாச[illegible] ஆகி

இந்தியாவில்

## செயற்கைக்கோள் தொடர்பு நிலையம்

பம்பாய், டிச. 26

சென்ற மாதம் இங்கு ஆரம்பித்து வைக்கப்படவிருந்த செயற்கைக் கோ தொடர்பு நிலையம் சில சாதனங்கள் கிடைக்காததால் அடுத்த ஆண்டு ஜூன்மாதம் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது. இதற்கிடையில் யுனெஸ்கோ ஆதரவில் டில்லியில் ஒரு நிலையம் நிறுவப்படுமென்றும், இந்நிலையம் பள்ளிக்குழந்தைகளுக்கும் கிராமப்புற மக்களுக்கும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளைத் தயாரித்து கல்விச் சேவை செய்யுமென்றும் கூறப்படுகிறது.

—— ——

## நடிகர்களுக்கு வரவேற்பு

பருத்தித்துறை, வெள்ளி

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் தாம் உருவாக்கிய ‘‘காதலும் கத்தரிககாயும்’’ ‘‘தங்கப்பதக்கம’’ ஆகிய நாடகங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டுத் திரும்பும் கரவை வள்ளுவர் மன்ற நடிகர்களுக்கு கரவெட்டிப்பகுதி இளைஞர்கள் ஒரு வரவேற்பளிக்க விருக்கின்றனர். கலைக்குரிசில் திரு. எஸ். கந்தவனம் தலைமையில் இவ்வரவேற்புநடைபெறும்.

ச. ச. நிலைய

## நிறைவேற்றுக் குழு நியமனம்

மல்லாகம், வெள்ளி

யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் அடுத்த மாதம் 4-ம் திகதி யாழ். மாவட்ட சனசமூக நிலயங்களின் நிறைவேற்றுக் குழுவின் அங்குரார்ப்பண மகாநாடு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசேப் தலைமையில் நடைபெறும். மகாநாட்டை அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் ஆரம்பித்து வைப்பார். கலை. கலாச்சார, சமய வளர்ச்சிகள், விளையாட்டுக்கள், வாசிகசாலை அபிவிருத்தி உள்ளூராட்சி வாரத்தில் சனசமூக நிலையங்களின் சமாஜ விழாபற்றி இதில் ஆராயப்படும்.

## இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

கரவெட்டி நபாற்கந்தோர் உதவி அதிபர்களான திருவாளர்கள் சீ. செல்லத்துரை, பீ. சுப்பிரமணியம் ஆகியோர். முறையே

வியட்னாமில் காணாமல்போன

## அமெரிக்க சிப்பாய்களின் மனைவிமாரும் பிள்ளைகளும் வாடகை விமானத்தில் பாரிஸ் வந்தனர்

பாரிஸ், டிச. 26

வியட்னாம் போரில் காணாமற்போன அமெரிக்க வீரர்களின் மனைவிமாரும், பிள்ளைகளும் சேர்ந்து சுமார் 150பேர் நேற்று பாரிஸுக்கு வந்து வட வியட்னாம் பிரதிநிதிகளைச் சந்திக்க முயற்சி செய்தனர். காணாமற்போன அமெரிக்கச் சிப்பாய்கள் பற்றிய தகவல்களை இவர்கள் கோரினார்கள்.

பாரிஸில் நடைபெறும் வியட்னாம் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வந்திருக்கும் வட வியட்னாம் பிரதிநிதிகளைச் சந்திக்க இந்தப் பெண்களும், பிள்ளைகளும் வந்தபொழுது பிரஞ்சுப் பொலிஸார் அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். பின்னர் அவர்கள் சார்பில் மூன்று பெண்களை மட்டும் சந்திக்க வட வியட்னாம் பிரதிநிதி சம்மதித்தார். வட வியட்னாமில் காவலில் வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர்கள் பற்றிய விபரங்கள் படிப்படியாக வெளியிடப்படும் என்று வட வியட்னாம் பிரதிநிதி அவர்களிடம் தெரிவித்தார்

இந்த 150பேரும் வாடகை விமானமொன்றில் பாரிஸ் வந்தனர்.

வியட்னாமில் கிறிஸ்மஸ் போர் ஓய்வுக்கு இரு தரப்பினரும் அறிவித்தல் கொடுத்திருந்த போதிலும் போர் ஓய்வுச் சமயத்தில் குறைந்தது 80 சம்பவங்களாவது இடம்பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

# பல்கலைக்கழகம் பற்றி யாழ். இளைஞர் கழகம்

யாழ்ப்பாணம். சனி

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கலைத்துறை, இந்துக்கலாசாரம், கீழைத்தேயக் கல்வி, சட்டம் ஆகியவைகளையும், யாழ் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியியலையும் திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் அல்லது விவசாய வளம் மிகுந்த மட்டக்களப்பில் விவசாயத்தையும், • யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் வைத்தியத்தையும் பயிலக்கூடிய முறையில் அனைத்தையும் உள்ளடக்கி பூரணமான ஒரு பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவித்தரவேண்டும்.’’

இவ்வாறு யாழ். இளைஞர் கழகம், பல்கலைக்கழகப் பிரச்னை சம்பந்தமாக தேசிய உயர்கல்விச் சபைத் தலைவருக்கு அண்மையில் அனுப்பிவைத்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

இளைஞர் கழகம் மேலும் தனது மகஜரில் புதிதாக அமைக்கப்படும் பல்கலைக்கழகத்திற்கு மேற்கண்டகல்லூரிகளைப் பயன்படுத்தினால் அரசாங்கத்திற்கு புதிதாகக் கட்டிடங்களை அமைக்கும் செலவுகள் மிச்சப்படுவதோடு பேராதனை, கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்று பெருந்தொகைப் பணத்தைச்செலவிடும் 90 சத வீதமான நமது மாணவர்களுக்கும் செலவு குறைவதாகவிருக்குமென்றும், பரமேஸ்வராக் கல்லூரியில் வைத்தியத்துறையை நிறுவினால் அங்கு பயிலும் மாணவர்கள் யாழ். அரசாங்க ஆஸ்பத்திரியில் தமது செய்முறைப் பயிற்சியை மேற்கொள்வதற்கு வசதியாக விருக்குமென்றும் இன்னும் இது சம்பந்தமான பல விஷயங்களையும் இங்கு வரும் பல்கலைக்கழக விசாரணைச் குழுவிற்கு விளக்கத் தயாராக விருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.

# ‘சிறிய உதவிகளை நல்ல வழியில்உபயோகிக்கிறார்கள்’

## வடபகுதி கூட்டுறவு வளர்ச்சிபற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நெரிசலில் 27 பேர் பலி

லண்டன், டிச. 26

கொங்கோவில் காற்பந்தாட்ட நிகழ்ச்சி ஒன்றைப் பார்க்க வந்த விசிறிகளுக்கிடையில் ஏற்பட்ட நெரிசலில் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டார்கள். 100 பேருக்கு மேல் காயமடைந்தார்கள். இவர்களில் சிறுவர்களே அதிகமாம்.

ருக்கிறார்கள்,

— —

மதுரை

## மீனாட்சி அம்மன் கோயில்

சென்னை, டிச. 26

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்து ஒலி ஒளி, காட்சி வசதிகள் செய்வதற்குத் தமிழ்நாடு அரசு கோரும் எல்லா உதவிகளையும் மத்திய அரசு செய்துகொடுக்கும் என்று மத்திய உல்லாசப் பிரயாண மந்திரி திரு. கரன்சிங் உறுதியளித்திருக்கிறார்.

கான அனுமதிக் கோட்டா வெகு விரைவில் அரசாங்கத்தால் வழங்கப்படவிருக்கிறது. இத்தானியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தனியார்துறையினருக்கு ஒரு கோடி 50 லட்சம் ரூபா வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தா[illegible] ஆட்சியை நடத்தி வருகிறார். என ராஜாஜியின் மகன், திரு. நரசிம்மன், தனது தந்தையின் பிறந்தநாள் விழாக் கூட்டமொன்றில், கூறியிருக்கிறார். அ[illegible] மேலும் இந்திராவின் ஆட்சி, நிழலாட்சி யென்றும் சீனா, பாகிஸ்தானின் தொல்லைகளைத் தாங்கக் கூடியவலு இந்த ஆட்சிக்கில்லை யென்றும் தெரிவித்தார்.

0 0 0

### இந்திரா விளக்கம்

சஞ்சீவிரெட்டியை எதிர்க்கும் எண்ணம் தமக்கில்லை யென்றும், ஜனாதிபதி தேர்தலில் அவரது நியமனப் பத்திரத்தைத் தாம் தான் தாக்கல் செய்ததாகவும். அதே வேளையில் அவர் ராஷ்டிரபதியானவுடன், தம்மைக் கவிழ்ப்பதற்கான சதி உருவானதாகவும், இதை நிஜலிங்கப்பாகூட எந்தஇடத்திலும் மறுக்கவில்லையென்றும் எனவேதான், தான் அவரை எதிர்க்க நேர்ந்ததென்றும், பிரதமர் இந்திரா. கான்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் பிரதிநிதிகள் மகாநாட்டில் தெரிவித்தார்.

0 0 0

### ஆந்திரா நன்றி

சென்னையில் மறைப்திருந்த நரசிம்மன் போன்ற 9 தீவிர கம்யூனிஸ்டுகளைப் பிடித்துக் கொடுத்தற்காக தமிழக அரசுக்கு ஆந்திர அரசு நன்றி தெரிவித்திருக்கிறது.

0 0 0

### நக்ஸல் பாரிகள் சாவு

ஸ்ரீ காகுளம் ஜில் லா வில் சமீபத்தில் நடந்த கோரக் கொலை சம்பந்தமாக, குற்றவாளிகளைத் தேடிவந்த பொலிசாருக்கும் நக்ஸல் பாரி கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் ஏற்பட்டமோதலில துப்பாக்கிச்சூடுபட்டு 6 நக்ஸல் பாரிகள் இறந்துவிட்டனர். எஞ்சியவர்கள் ஓடிவிட்டனர். அந்த இடத்தில் பொலிசார் சோதனையிட்டபோது இரண்டு துப்பாக்கிகள் மூன்று நாட்டு வெடிகுண்டுகள், ஆட்சேபகரமான கம்யூனிஸ்ட் பிரசுரங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

0 0 0

### யசோதைக்கு சிறை

விழும்புரத்தைச் சேர்ந்த யசோதை என்னும்பெண் தனதுகணவனாகிய நாராயணசாமியை செருப்பால் அடித்து அவமானப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் யசோதைக்கு 6 வாரம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தநிலைமை நீடி[illegible]ால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும்.

திருவாளர்கள் எஸ். பி. மயில்வாகனம் ஈ. கே. ராஜகுலேந்திரன் பண்டிதர் பி. எம். ஞானப்பிரகாசம் ஆகியோரும் பேசினார்கள்.

— —

## தொழிற்சாலையில் தீ விபத்து

கேட்டை, வெள்ளி

பாலத்துறையிலுள்ள தும்புத்தொழிற்சாலை யொன்று தீப்பிடித்தன் காரணமாகப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இது இத்தும்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட மூன்றாவது தீவிபத்தாகும்.

இத் தீயைஅணைப்பதற்குத் தீயணைப்புப்பகுதியினர் மிக கஷ்டப்பட்டதாகத் தெரிகிறது.

இத் தீவிபத்தால் மேற்படி தும்புத் தொழிற்சாலைக்கு ஏற்பட்ட சேதம் எண்பதினாயிரம் எனக்கணிக்கப்பட்டுள்ளது.

—

### வட்டு. பிரயாணிகள் சங்கம்

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட வட்டுக்கோட்டை பஸ் பிரயாணிகள் சங்கத்தின் தலைவராக யாழ்ப்பாணம் உன்னத உறுதுணையாளர் சங்க அங்கத்தவர் திரு. என். நடராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நிர்வாக சபை அங்கத்தினருமாவார்.

— —

## வெள்ள அபாயம்

செட்டிகுளம், வெள்ளி

சில தினங்களாக மன்னார் பகுதியில் கடும்மழை பெய்வதால் வெள்ள அபாயம் ஏற்படலாம் என இப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இம்மழையால் விவசாயிகள் நன்மையடைந்துள்ளார்களெனினும் இடைவிடாது மழை பெய்வதால் வெள்ள அபாயமேற்படலாம் என அச்சமேற்பட்டுள்ளது.

— —

## மணிவாசகர் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், சனி

சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் திருவெம்பாவை முன்னிட்டு மாணிக்கவாசகர் சரித்திரம் என்னும் நூல் வெளியிடப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் நூலை வெளியிட்டுவைத்தார்.

## இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

கரவெட்டி தபாற்கந்தோர் உதவி அதிபர்களான திருவாளர்கள் சி. செல்லத்துரை, பீ. சுப்பிரமணியம் ஆகியோர் முறையே கொழும்பு தபாற்கந்தோருக்கும், யாழ்ப்பாணம் தபாற்கந்தோருக்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

(8-ம் கலத் தொடர்ச்சி)

போதிய வளர்ச்சி காணப்படவில்லை. திரு. வீரமன் சகல இன மக்களுக்கும் பாகுபாடுகளின்றி சேவை செய்து அரசாங்க உதவிகளை கூட்டுறவு இயக்கங்களுக்கு தகுதியானவழியில்தேடித்தந்தார் இவரின்பதவி உயர்வுடனான இடமாற்றம் நமது நாட்டிற்கு நஷ்டமான போதிலும் தென்கிழக்காசிய நாடுகளுக்கு பெரிதும் உதவியாக விளங்குகின்றது. சிங்கள மக்கள் மத்தியில் திரு. வீரமன் போன்ற பெரியார்கள் தோன்றினால் நமது பிரச்னை ஓரளவு சுமுகமாக தீர்வு காணப்படலாம்.

திரு த. சண்முகசுந்தரம் நன்றியுரை கூறினார். திரு. செல்வநாயகம் எம். பி. டாக்டர் எஸ். சின்னையா ஆகியோரும் பேசினர். ஆரம்பத்தில் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

## 'சிறிய உதவிகளை நல்ல வழியில் உபயோகிக்கிறார்கள்'

### வடபகுதி கூட்டுறவு வளர்ச்சிபற்றி தென்கிழக்காசிய பிரதேச அதிகாரி

மல்லாகம், வெள்ளி

''கூட்டுறவுத் துறை பொருளாதார அபிவிருத்தியை மட்டும் ஏற்படுத்துவதுடன் நின்றுவிடாது சமூக முன்னேற்றத்திற்கும் பேருதவி புரிகிறது. வடபகுதியில் ஆட்சிமன்ற உறுப்பினர் களினதோ அரசியல் கட்சிகளினதோ தலையீடுகள் இன்றி இவ்வியக்கம் வளருகின்றது. ஆனால் நமது நாட்டின் ஏனைய பகுதிகளிலும், இந்தியாவிலும் கூட அரசியல் வாதிகளின் செல்வாக்கு தலையீடுகள் காரணமாக கூட்டுறவு இயக்கம் சீரழிகிறது''.


தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரியில் நிறுவப்பட்டுள்ள வீரமன் மருத்துவமனைத் திறப்பு விழாவில் சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவன தென் கிழக்காசிய பிரதேச அதிகாரி திரு பீ. ஈ. வீரமன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். வியாழக்கிழமை மாலை காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் குத்துவிளக்கேற்றி மருத்துவ மனையைத்திறந்து வைத்தார்.

திரு. வீரமன் மேலும் பேசியதாவது: யாழ்ப்பாண மக்கள் சத் புருஷர்கள் போன்றவர்கள். சிறிய அளவில் வழங்கப்படும் உதவிகளைக் கூட தகுந்தவாறு உபயோகித்து நன்மை பெறுபவர்கள்.


செனட்டர் எஸ். நடராசா பேசுகையில் கூறியதாவது: நமது நாட்டில், நிலவும் இன வேற்றுமைகள், பேதங்களை நீக்கி மக்கள் எல்லோரும் தமது வாழ்க்கையை கூட்டுறவு அடிப்படையில் அமைத்துக்கொள்ளல் வேண்டும். துர் அதிஷ்டவசமாக சில அரசியல் வாதிகள் குந்தகம் விளைவிக்கின்றனர். இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தில் யாழ். குடாநாடு முன்னணியில் திகழ்வது குறித்து நாம் பெருமிதமடைய வேண்டும். தென் பகுதியில் இத் துறையில்

(6-ம் கலம் பார்க்க)


புகையிலை, தென்னை, காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் இந்தப் பூச்சி புழுக்களை அழித்து உங்கள் பண வருவாயைப் பாதுகாக்க, பாவியுங்கள்




மெற்றசிஸ்டொக்ஸ்'ஆர்'




குத்தும், உறிஞ்சும் சகல பூச்சிகளையும் கொன்றொழிக்க வல்லது மெற்றசிஸ்டொக்ஸ். அது ஒரு தொகுதிப் பூச்சி கொல்லி. தெளித்ததும் அது பயிர்ச் சாற்றுடன் சேர்ந்து, காய்கறியைத் தாக்கும் அழுக்கணவன், ஒட்டுண்ணி, வெண் ஈ, பனிப்பூச்சி, பேன், தென்னையைத் தாக்கும் செவ்வண்டு, அனைத்தையும் அழிக்கும்.

மெற்றசிஸ்டொக்ஸ்—ஒரு பேயர் தயாரிப்பு. அது நம்பிக்கையான, விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.

உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி.

இலங்கையில் விநியோகிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட், 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P.9157



உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள் செலுத்தும் பரிபூரண அஞ்சலி

ஏ. எப். ரேமண்ட்ஸ்

ஈமக் கிரியை ஏற்பாடுகள்

புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.

147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.



ஏ எப் ரேமண்ட்ஸ்

0231


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தினசரி வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும் துயரங்களும் அடங்கி உள்ளத்தில் அமைதி உண்டாவதற்குப் பிரார்த்தனையைவிடச் சிறந்த வழி வேறில்லை. —மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 12-ந் திகதி (27-12-69)


## சங்கானையின் முன்மாதிரி

சங்கானைப் பகுதியில் தேநீர்க்கடைச் சொந்தக்காரர் மத்தியில் ஏற்பட்டுள்ள மனமாற்றமும் அவர்கள் காட்டியுள்ள முன்மாதிரியும் வடபகுதியில் இதர பல இடங்களும் பின்பற்றுவதற்குசிறந்தது.

வடபகுதியில் தீண்டாமை பெரும் பிரச்னையாக இருந்து வருவதும்சமூகமுன்னேற்றத்துக்குஇது தடையாகஇருந்து வருவதும் நாடறிந்ததே. சென்ற சில வருடங்களில் ஆலயப் பிரவேசம் தேநீர்க் கடைப் பிரவேசம் முதலிய கிளர்ச்சிகள் ஏற்பட்டு வடபகுதியின் அமைதிக்கே ஆபத்து நேர்ந்தது, ஆனாலும் பிரச்னைகள் தீரவில்லை. நீதிமன்றங்களில் மனுக்களும் எதிர் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகளும் நடைபெற்றன. கைகலப்புச் சம்பவங்களும் ஏற்பட்டது. இவை வடபகுதி மக்களின் மதிப்பை உயர்த்த உதவவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் சங்கானைப் பகுதியில்சில தேநீர்க்கடைகளுக்குச் சிறுபான்மைத் தமிழர் சிலர்தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்களுடன் சென்றபோது அந்தக் கடைகளின் சொந்தக்காரர்கள் எதுவித பாகுபாடுமின்றி மற்றையோரைப் போலவே அவர்களையும் சமமாக நடத்தியிருக்கின்றனர். வன்முறைச் செயல் எதுவும் நடைபெறவில்லை. தேநீர்க் கடைகளுக்குச் சென்றவர்களும் ஆர்ப்பாட்டம் செய்தோ ஆரவாரம் செய்தோ கடைகளுக்குள் நுழையவில்லை. கடைச் சொந்தக்காரர்களும் கடைகளிலிருந்தவர்களும் அவர்களைத் தடுக்கவில்லை. தீண்டாமைக் கொடுமையை வடபகுதி மக்கள் உணர்ந்து அதற்கு முடிவுகட்ட வேண்டிய அவசியத்தையும் அறிந்துள்ளனர். மக்கள் மனம் மாறி வருகிறது.

தீண்டாமையை ஒழிப்பதற்கு வன்முறைச் செயல்களோ சட்டங்களோ சரியான பயனளிக்க மாட்டாதென்பதையும் மக்களின் மனமாற்றத்தின் மூலமே தீண்டாமையை நிரந்தரமாக ஒழிக்க முடியுமென்பதையுமே சங்கானை நிகழ்ச்சி தெளிவாக்குகிறது. மக்களின் மனதை மாற்றுவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்யப்பட வேண்டும்.




மழை எப்பொ வடும், வடும் என்று ஒங்கித் தவித்த காலம் போய் மழை எப்போ விடும், விடும் என்ற காலம் வந்திருக்கிறது. ஆவணி மாதம் முதலாம் திகதி பெய்யத் தொடங்கிய மழை இன்றைக்கு மார்கழி பதினென்றாகியும் இன்னும் யாழ்ப்பாணத்தைவிட்டுப் போகும் எண்ணமில்லை.

கடந்த பத்து தினங்களாக இடையிடையே வெளிப்பதும் சட்டென்று கிறது. மழைச் சூல் கொண்ட முகில்கள் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டுஓடுகின்றன.

இந்தக் காற்று மாறி கச்சான் அகுக்குமோ என்ற பயம் கமக்காரரை மட்டுமன்றி பொதுவாக எல்லோரையுமே பீடித்திருக்கிறது. 1964-ம் ஆண்டு டிசம்பர் 22-ந் திகதி அடித்த கொடிய புயலின் நினைவு இருக்கிறதல்லவா? முக்கியமாக வாழைத் தோட்டக்காரர் மூக்கில்

# மன்னார் பகுதி இராணுவமுகாம்களை உடன் அகற்றவேண்டும்

## தாழ்வுபாடு சம்பவம் கற்பிக்கும் முக்கியபாடம்

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்குப் புறப்படு முன் பொலிஸ் அதிபர் சுந்தரலிங்கத்தாருக்கு டெலிபோன் செய்து, மன்னார் தாழ்வுபாடுகிராமத்துக்கு நேரில் சென்று பார்க்கமுடியுமா என்று விசாரித்தேன். அங்குள்ள எம். பி. மூலம் சென்றால் உதவியாக இருக்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

திருக்கேதீச்சரம் சென்றதும், மன்னார் எம். பி. திரு அழகக்கோன் வீட்டுக்கு டெலிபோன் செய்தேன். அவர் ஏதோ அவசர காரியமாக வெளியூர் சென்றிருந்தார். அவரது காரியதரிசி தாமே காருடன் வந்து அழைத்துச் செல்லுவதாக அன்புடன்தெரிவித்து உடன் வந்தார். அவருடன் நேரே மன்னார் சென்று முதலில் அரசாங்க அதிபர் கதிர்காமநாதனைப் பார்த்துப் பேசினேன். அரசாங்க அதிபர் கதிர்காமநாதனும், மன்னார் எம். பி. அழகக்கோனும் காலாகாலத்தில் தக்க நடவடிக்கை எடுத்ததால்தான் நிலைமை காப்பாற்றப்பட்டதாயும், இன்றேல். தாழ்வுபாடு உள்ளிட்டு மன்னாரே படுநாசமாகி இருக்கக்கூடுமென்றும் பொதுமக்களில் பலரும் நன்றியுடன் தெரிவித்தனர்.

தாழ்வுபாடு கடற்கரையில் நடைபெற்ற இரு சிப்பாய்களின் இரட்டைக் கொலைபற்றி பல விபரங்களையும் கேட்டறிந்தேன். ஆனால் இதுபற்றிய வழக்கு தாக்கல்செய்யப்பட்டு, சந்தேகத்தின்மீது 21 பேர் கைது செய்யப்பட்டிருப்பதால், அவ்விபரங்களைப்பற்றி வெளியிடுவது சட்டசம்மதமாகாது. ஆனால் இராணுவத்தினர் வந்து தங்கள் கிராமத்தின்மீது பழிவாங்கத் தாக்கலாமென்றும் கிராம மக்கள் அஞ்சி, அந்த ஊரை காலிசெய்து வெளியேறிவிட்டனர்.

இதற்கிடையே நிலைமையின் ஆபத்தை உணர்ந்த அரசாங்க அதிபர், கொழும்புக்கு விவரங்களைத் தெரி

சமாளித்தது சாதாரணகாரியமல்ல.

காயம் பட்டவர்களிலே இருவரின் கால்கள் துரதிருஷ்டவசமாகத் துண்டிக்கப்படவேண்டி ஏற்பட்டதாம். பாவம்!

கிளிநொச்சியிலிருந்து இச் சம்பவம்பற்றி விசாரணை செய்ய வந்துள்ள பொலிஸ் அதிகாரியுடன் பேசிவிட்டு மன்னாரிலிருந்து சுமார் 2 மைல் தூரமுள்ள தாழ்வுபாடு கிராமத்துக்குக் காரில் சென்றோம். அப்போது பகல் 11 மணி. தெருவில் ஜனநடமாட்டமே இல்லை. அது ஒரு கத்தோலிக்க கிராமம். அன்று கிறிஸ்மஸ் பெருநாள் என்றாலும், கொண்டாட்டத்துக்கான அறிகுறிகள் சிறிதுமில்லை. பல வீடுகளுக்குள் மக்கள் இருந்தனரென்றாலும், யாரும் வெளியில்வரக் காணோம். விசேஷபொலிஸ் நிலையத்தின் முன்பு, கவலை தோய்ந்த முகத்துடன் இருந்த ஒரு வயோதிபரைக் கண்டேன். நிலைமை எப்படி உள்ளது என்று அவரை விசாரித்ததில், மக்கள் எல்லாரும் திரும்பிவந்துவிட்டாலும், வெளியில் நடமாடவும் பயப்படுவதாகவும் எந்தச் சமயமும் தாக்குதல் நடக்குமோ என்று அஞ்சுவதாகவும் சொன்னார். அக் கிராமமே செத்தவீடுபோல் காட்சி அளித்தது. இந்நிலையில் அவர்கள் கிறிஸ்மஸ் பெருநாளை எப்படிச் சந்தோஷமாகக் கொண்டாட முடியும்?

0 0 0

சட்டவிரோத குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தடுக்க சில வருடங்களுக்கு முன்பாக 'டபிள் டயசுகளின்' ஆட்சிக்காலத்தில், மன்னார் பகுதியிலே தள்ளாடி உள்ளிட்டு, பல இடங்களிலும் இராணுவ காவல் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. அமைதியாக வாழ்ந்துவந்த அப்பகுதி கிராமமக்களுக்கு, அது முதல் நிம்மதியாக வாழமுடியவில்லையாம். அங்குமீனவர்களே அதிகம் கடற்கரையிலே காவல்புரியும் துப்பாக்கி சிப்பாய்கள், இலவசமாக மீன் வேண்டுமென்று கேட்பார்களாம். த்ராவிட்டால் பலாத்காரமாக பறித்துக்கொண்டு போவரென்றும், இன்னும் பல பல இம்சைகளென்றும் கேள்விப்பட்டேன். சிப்பாய்களில் பெரும்பாலோருக்கும் அங்கு வதியும் பொதுமக்களின் மொழியான தமிழ் மொழி தெரியாது. இதனால் இரு சார்பினருக்கும் நல்லுறவு ஏற்பட முடியவில்லை.

தங்கள் குடும்பங்களை விட்டு வெகுதூரம் வந்து தனியே இருக்கவேண்டிய சிப்பாய்களின் நிலைமையும் மகிழ்ச்சியானதல்ல. தள்ளாடி முகாமிலே அடிக்கடி பல பாம்புகள் வருவதுண்டாம். அங்கு குடிதண்ணீரும் இல்லை. வெகுதூரத்திலிருந்து வரவேண்டும். கரையோரங்களில் இரவு பகல் காவல்வேலை. கடல்வழியாக கள்ளத்தோணிகளில் யாரும் வந்து, கரையில் இறங்கும்போது அவர்களைப் பிடிக்கவேண்டியதே அவர்களது கடமை.

ஆனால் சென்ற வருடம் மொத்தம் 1666பேர் பிடிபட்டதாகவும், அவர்களில் 21 பேரைத்தான் இராணுவப்படையினர் பிடித்ததாகவும், கடற்படையினர் 14 பேரையே பிடித்ததாகவும் ஒரு கணக்குத் தெரிவிக்கிறது. மற்றவர்களை பொலிசார் பொதுமக்களின் உதவியுடன் பிடித்துள்ளனராம். இப்புள்ளிவிபரம் உண்மையாயின், இராணுவத்தினரையும், கடற்படையினரையும் இவ்வேலைக்காக அப்பகுதியில் வைத்திருக்க வேண்டியது அவசியம்தானா? இதற்காகச் செலவாகும் பொதுப் பணம் எவ்வளவு? இச் செலவுக்குத் தகுந்தபலன் கிடைக்கிறதா என்பனமுக்கியகேள்விகள். இதைப்பற்றிவிசாரித்ததில், கள்ளக்குடியேற்றம், கள்ளக்கடத்தல் இவற்றைத் தடுப்பதற்காக என்ற சாட்டிலே, இப்பகுதி தமிழ் மக்களை அடக்கி பயமுறுத்தவே இந்த இராணுவக்காவல் முகாம்களை பழைய 'டபிள் டயஸ்' ஆட்சியினர் ஏற்படுத்தியதாகவும். இதுவே உண்மைக் காரணமென்றும் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

இதுஎப்படியாயினும், இனி அங்கு இவ்வேலைகளுக்குஇராணுவத்தையும், கடற்படையினரையும் தொடர்ந்து பாவிப்பது அவசியம்தானா என்பதைப்பற்றி புனராலோசனை செய்யவேண்டிய சமயம் வந்துவிட்டது. மேற்குறித்த துரதிருஷ்ட சம்பவங்களுக்குப்பின். இராணுவத்தினர், கடற்கரை ஓரங்களில் காவல் புரிவதில்லையாம். கடலில்மட்டும் படகுகளில்சென்று கள்ளத்தோணிகளைத்தடுக்கும் வேலையே அளிக்கப்பட்டிருப்பதாக அறிந்தேன். இது கடற்கரையில்வசிக்கும் பொதுமக்களுக்குப் பல விதங்களிலும் நன்மையே.

என்றாலும், கடலில் இராணுவத்தினர் காவல்புரிவதாயின், கடல்தொழிலாளர்கள் நிம்மதியாக மீன் பிடிக்க முடியாதென்று மீனவர்கள் அஞ்சுகின்றனர். சென்ற சுமார் இரண்டு வாரங்களாக மன்னார்ப் பகுதியில் சிறப்பாக தாழ்வுப்பாடு கிராமத்தவர் இரவுவேளைகளில் மீன் பிடிக்கச்செல்லுவதில்லை என்றும், காலைவேளையில் சிறிது நேரமே கடலில் செல்லுவதாகவும் தெரிகிறது. இதனால் மீன் விலை அதிகரித்து மீனுக்கும் அதிக தட்டுப்பாடு ஏற்படுவதாக இருக்கிறது.

இந்த சம்பவத்தினால் அறியும் ஒருமுக்கியபாடம்என்னவெனில், இராணுவத்தினரை இப்பகுதிகளில் நிரந்தரமாக வைத்திருப்பது நல்லதல்ல என்பதுதான். பொலிசார் இக்கடமைகளை அதிக திறமையாகப் பார்க்கமுடியும் என்பது புள்ளிவிபரக்கணக்கிலிருந்தே தெரிகிறது. ஆகவே இதைப்பற்றிப் பிரதமர் நிதானமாக ஆராய்ந்து, இங்குள்ள இராணுவ முகாம்களை கூடிய சீக்கிரம் நீக்கி, அவர்களை அதிகபயனுள்ளகாரியங்களுக்கு பயன்படுத்துவதாயின்இப்பகுதி பொதுமக்களின் அபிமானத்தையும் நன்றியையும் அவர் பெறுவதுடன், இராணுவ சிப்பாய்களுக்கும் கூட அதுபெரியகஷ்ட நிவாரணமாக இருக்கும். இதற்காகும் பணத்தை விசேஷ பொலிஸை நியமிக்க வெற்றிகரமாகப் பயன்படுத்தலாம்,

தள்ளாடி என்று அந்த இராணுவமுகாமுள்ள இடத்துக்கு ஏன் பெயர் வந்தது தெரியுமா? இலட்சுமணரை உயிர்ப்பிக்க, சஞ்சீவி மலையையே தூக்கிக்கொண்டு வந்த அனுமார், அந்தஇடத்துக்கு வந்ததும் சற்றே தள்ளாடிப் போனாராம்! அதனால் அம் மலையிலிருந்த பல அரிய மூலிகள் அந்த இடத்தில் வளர்ந்ததாகவும், இப்போதும் பல மூலிகைகள் அங்குண்டென்றும் ஓர் அன்பர் தெரிவித்தார். இதுஉண்மையாயின் அப்பகுதியிலே இராணுவத்தை அகற்றிவிட்டு மூலிகைகளை பயிரிட்டுவளர்ப்பது மக்களுக்கும் நாட்டுக்கும் அதிக பயனுள்ளதாக இருக்கும்.

— ஐயாறன் —

## இன்று ஜப்பானில் தேர்தல்

டோக்கியோ, டிச. 26

ஜப்பானில் நாளைபொதுத் தேர்தல் நடக்கவிருக்கிறது. 7 கோடி மக்கள் இத் தேர்தல் வாக்களிப்பில் கலந்து கொள்கிறார்கள். ஆயிரத்துக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான தொடர்பு இத் தேர்தலில் முக்கிய பிரச்னையாக இடம் பெறுகிறது.

# அன்று நினைத்தபடி நடந்தவர் இன்று கருத்து கோருவதேன்?

தமிழ்ப் பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவது [illegible] சம்பந்தமாக தமிழ்ச் சமூகத்தினரின் கருத்துக்களைக்கோரியுள்ளதைத் தொடர்ந்து நியாயதுரந்தரர் திரு இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா தனது கருத்துக்களைத் தெரிவிக்குத் கல்வி [illegible] மைச்சருக்குப் பகிரங்

தமிழர்கள் நலனையும் அவர்களது முன்னேற்றத்தையும் பொறுத்தளவில் கல்[illegible]மைச்சராகிய நீங்கள் அசிரத்தையாக இருக்கின்றீர்கள் என்றே நான் நம்புகிறேன். உங்களது இந்த [illegible] வெளிப்படையா

கியுள்ளீர்கள். பல்கலைக்கழக மாணவர்கள்கூட உங்கள் நிர்வாகத்தை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்துள்ளார்கள். உங்களால் ஏமாற்றப்பட தமிழர்கள் மட்டுந்தான் விடப்பட்டுள்ளார்கள்என நினைக்க வேண்டாம். அப்படி நினைத்தால் சிலவேளைகளில் சில

## தெட்சணாமூர்த்தி

சென்னை, டிச 26

தியாகராய நகர் ஸ்ரீ கிருஷ்ண கானசபா இசைவிழா நிகழ்ச்சியில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தொடங்கிய மழை இன்றைக்கு மார்கழி பதினெேன்ருகியும் இன்னும் யாழ்ப்பாணத்தைவிட்டுப் போகும் குணமில்லை.

கடந்த பத்து தினங்களாக இடையிடையே வெளிப்பதும் சட்டென்று மழை கொட்டுவதுமாயிருக்கிறது. துப்புரவாக மழை வெளிப்பதற்கு முன் இரண்டொரு அறிகுறிகள் தென்படுவது வழக்கம். கச்சான் காற்றடித்தால்தான் மழை வெளிக்கும் என்று அனுபவப்பட்டவர்கள் சொல்லுகிருர்கள். இல்லாவிட்டால் நாலா பக்கமும் மின்னல் மின்னி இடி முழங்கினுலும் மழை வெளித்துவிடும் என்பது ஐதீகம். இவ்விரு அறிகுறிகளையும் இதுவரை காண முடியவில்லை.

நெற்பயிர் செய்யும் கமக்காரரைப் பொறுத்தவரையில் இம்முறை போதும் போதுமென மழை பெய்து கொடுத்துவிட்டது. மேட்டுப் பாங்கிலுள்ள வயல்களிலும் கதிர்வந்து முற்றுமளவிற்கு போதிய தண்ணீர் தாராளமாக நிற்கிறது. பள்ளக்காணிகளைப் பற்றி சொல்லத் தேவையில்லை. வேளாண்மை இம்முறை 'அச்சா, ஒண்ணும் நம்பர்' என்று கமக்காரர் எல்லோரும் புழுகிக்கொண்டிருக்கிருர்கள். ஆனுல் சிலருக்கு உள்ளூரக் கவலையும் இருக்கிறது.

மழை வெள்ளம் இனி ஓடி வெளியேறுவதற்கு வழியில்லை: வற்றிப் போவதற்குப் போதிய சூரிய வெளிச்சம் இல்லை. முகிற் கூட்டங்கள் கப்பிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் மழை மேலும் தொடர்ந்து பெய்யுமானுல் என்ன செய்வது?

கதிர்கள் முற்றி அறுவடைக்கு தயாராயிருக்கும் சமயத்தில் நிலம் ஈரமாயிருக்க வேண்டுமேயொழிய தண்ணீர் தேங்கி நிற்பது விரும்பத்தக்கதல்ல. உயர்ந்து வளரும் பயிரினங்கள் ஏற்கனவே கதிர்ப் பாரம் தாங்காமல் வரம்புகளில் சாய்ந்து விழுந்துவிட்டன. தண்ணீருக்குள் கதிர்கள் விழுந்தால் நெல் மணிகள் அழுகி உதிர்ந்துவிடும். கூட்டி அள்ளவும் முடியாதபடி நிலத்துகுள் புதைந்து முளைத்தும்விடும்.

இரண்டு மூன்று நாட்களாக கடுமையான வாடைக்காற்று வீசிக்கொண்டிருக்கிறது பனி இல்லாவிட்டாலும் இந்தக் காற்றுடன் சேர்ந்து வரும் குளிர் எலும்பையும் துளைக்[...]லோரையுமே பிடித்திருக்கிறது. 1964-ம் ஆண்டு டிசம்பர் 22-ந் திகதி அடித்த கொடிய புயலின் நினைவு இருக்கிறதல்லவா? முக்கியமாக வாழைத் தோட்டக்காரர் மூக்கில் விரலை வைத்துக்கொண்டு ஆகாயத்தை நோக்கிய வண்ணம் இருக்கிருர்கள். வாழைத் தோட்டங்கள் முறிந்துவிட்டால் தைப் பொங்கலுக்கு வாழைப்பழமும் அரிதாகிவிடும்.

இவையெல்லாம் வெறும் ஹேஷ்யங்களேயன்றி இன்னுது ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. இன்னும் இரண்டொரு தினங்களில் எல்லாம் தெரிந்துவிடும் என்று எதிர்பார்க்கலாம். ஒன்றில் மழை துப்புரவாக வெளித்துவிடும், அல்லது...?

தோட்டப்பயிர் சேய்வோருக்கும் மழை சங்கடந்தான். அவர்களுக்குப் போதிய நீர்ப்பாசன வசதியுண்டு. ஆயினும் மழை விட்டுக்கொடுத்தால் தான் புகையிலைக்கன்று நடவோ, உருளைக்கிழங்கு விதைக்கவோ நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும்.

நெற்பயிர் செய்வோருக்கு இந்த வருடம் இன்னெரு வழியில் யோகம் அடித்திருக்கிறது. மழை ஒழுங்காகப் பெய்து கொடுத்தபடியால் பயிருடன் போட்டிபோட்டுக் கொண்டு கிளம்பிய புல் பூண்டு முதலிய களைகளை வெள்ளம் அடக்கிவிட்டது நெற்பயிர் வெள்ள மட்டத்துக்கு மேல் ஓங்கி வளர, களைகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. இதனுல் வழக்கமாகப் பிடிக்கும் பூச்சி புழுக்களும் இவ்வருடம் மிகக் குறைவு. கிருமி நாசினிகள் அடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகவில்லை. ஆனுல் இயற்கையின் விளையாட்டுகளை யார் கண்டார்கள்?

சில வயல்களில் எங்கிருந்தோ வெள்ளெலிக் கூட்டங்கள் வந்து சேர்ந்துவிட்டன. பயிர்க் குருத்துகளையும், குடலைகளையும் வெட்டி அறுத்துத் தின்பதில் இந்த எலிகளுக்கு அபார பிரியம். காலையில் எழுந்து போய்ப் பார்த்தால் குறுக்கே அறுபட்ட பயிர்க் குவியல்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. பூச்சி புழுக்களுக்குத்தான் மருந்துகளை அடிக்கலாம். புற்றில் மறைந்துகிடக்கும் எலிகளை என்ன செய்வது? அவற்றுக்கு எதிராக இதுவரை எந்த மருந்தும் கண்டு பிடிக்கப்படவில்லை: எலிகளின் உபத்திரவம் தாங்காமல் கமக்காரர்கள் கூரிய கம்பிகளைக் கொண்டு புற்றுகளைத் துளைத்து, எலிகளைக் கலைத்து, அவை வெளிக்கிட்டு ஓடும்பொழுது தடிகளால் அடித்து ஒவ்வொன்ருக கொல்லவேண்டியிருக்கிறது. எலிகளைக் கலைத்துப் பிடிப்பதென்பது லேசான காரியமல்ல. ஒரு புற்றைத் துளைத்தவுடனே அவை தண்ணீருக்குள் பாய்ந்து நீந்திப்போய் மற்ற வரம்பிலுள்ள வேருெரு புற்றுக்குள் புகுந்துவிடுகின்றன.

நல்ல வேளையாக இந்த எலி உபத்திரவம் பரவலாக இல்லாமல் சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

— கலப்பை

மக்கள் அஞ்சி, அந்த மனையை காலிசெய்து வெளியேறிவிட்டனர்.

இதற்கிடையே நிலைமையின் ஆபத்தை உணர்ந்த அரசாங்க அதிபர், கொழும்புக்கு விவரங்களைத் தெரிவித்ததுடன், தள்ளாடி தலைமை இராணுவ முகாமில் சிப்பாய்களிடம் இருந்த துப்பாக்கிகளை எல்லாம் ஆயுத அறையில் ஒப்புவிக்கச் செய்ததுடன், அச்சிப்பாய்கள் முகாமைவிட்டு வெளியேருமல். அங்குள்ள இராணுவ அதிகாரி மூலம் தடுக்கச் செய்ததுடன் போதிய பொலிஸ் படைகளையும் உடன்வரவழைத்துவிட்டார். இவ்விதம் முன் ஜாக்கிரதையான நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பின்: நிலைமை மிக விபரீதமாகி இருக்கக்கூடும். மிக ஆபத்தான நிலைமையை இவ்விதம் சாமர்த்தியமாக சமாளித்த திரு. கதிர்காமநாதனைப் போற்றிப் பாராட்ட வேண்டும்.

இரு சிப்பாய்களின் பிரேதங்களையும் கடற்கரையிலிருந்து அகற்றி, மரணவிசாரணையை நடத்தியதாக அறிந்ததும், தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து பல சிப்பாய்கள், சாதாரண உடையிலே ஆத்திரத்துடன் வெளியேறி. ஒரு ஜீப்பில் தள்ளாடியை நோக்கிச் சென்று அங்குகலகம்செய்து கிராமசேவகரின் வீட்டைக் கொளுத்த முயன்றதாகவும் பொலிஸ் படையினர் அவர்களைத் தடுக்க முயன்றும், அது பயன்படாது போகவே, அவர்களின் முழங்காலுக்குக் கீழ் சுட்டு கலகத்தை அடக்கியதாகவும் அறியவந்தேன். பொலிஸ் படைக்குத் தலைமை வகித்து நிலைமையை வெற்றிகரமாக சமாளித்தவரை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பாராட்டியதாக அறிந்தேன் அந்த ஆபத்தான நிலையில் உயிர்ச்சேதம் எதுவுமின்றி

...கம் நிறுவுவது சம்பந்தமாக தமிழ் சமூகத்தினரின் கருத்துக்களைக்கோரியுள்ளதைத் தொடர்ந்து நியாயதுரந்தரர் திரு இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா தனது கருத்துக்களைத் தெரிவித்துக் கல்வி அமைச்சருக்குப் பகிரங்கக்கடிதமொன்று எழுதியுள்ளார். அவரின் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன,

கல்வி அமைச்சராகிய நீங்கள் அசிரத்தையாக இருக்கின்றீர்கள் என்றே நான் நம்புகிறேன் உங்களது இந்த தன்மையை கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் தெ[...] வெளிப்படையாகக் காட்டிவிட்டது. தேசிய உயர்கல்விச்சபை அங்கத்தவர்களை தெரிவு செய்துள்ள உங்களுக்கு அச்சபையில் கூடிய செல்வாக்குள்ளதென்பதை நீங்கள் மறுக்கவியலாது. இவ்வாறிருக்கும் பொழுது கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு உபவேந்தர் தெரிவு செய்வதற்கு கொடுக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் இருந்து தமிழ் சமூகத்தைக் சேர்ந்தவராகிய மற்றவர்களிலும் பார்க்க அப்பதவிக்குக் கூடிய தகைமைகளை உடயவரான பேராசிரியர் மயில்வாகனத்தின் பெயர் நீக்கப்பட்டது. இதற்குக் காரணம் கேட்டபோது தவறை தேசிய உயர் கல்விச்சபையின் தலையில் பேட்டுவிட்டீர்கள் ஆனுல் உண்மை என்னவெனில் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு தமிழர் ஒருவரை உபவேந்தராக நியமிக்க நீங்கள் விரும்பாமையே காரணம் என்பது யாவரும் அறிந்ததே.

உங்கள் விருப்பத்துக்கிசையவே அதாவது உங்கள் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே அமைந்த தேசிய உயர்கல்விச்சபையை தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவும் விஷயத்தில் தமிழர்களிடம் இருந்து கருத்துக்களை ஏன் கோருமாறு நீங்கள் கேட்டுள்ளீர்கள் எனப் பலர் அங்கலாய்க்கின்றனர்.

## கருத்துக்கள் கோருவதன் மர்மம்

தமிழ் சமூகத்தவர்களிடமிருந்து இவ்வாறு கருத்துக்களை நீங்கள் கோருவது ஏனெனில் இக்கருத்துக்களை கருவிகளாகப் பயன்படுத்தி தமிழர்கள் கோரும் கோரிக்கைகளை செயல்படுத்தாது தட்டிக்கழிப்பதற்காகவே யாகும். தமிழர்களின் எந்தத் தீர்மானத்தையும் செயல்படுத்தாமல் விடுவதற்கு நல்ல காரணமாக அவர்களிடம் இருந்து கருத்துக்களில் ஏதாவதொன்றை சாதகமாக்கிக் கொள்வீர்கள்.

எடுத்துக் காட்டாக தமிழ் பல்கலைக்கழக விஷயத்தில் தமிழ்த் தலைவர்களின் மாறுபட்ட கருத்துக்கள் உங்களுக்கு நன்ருகத் தெரியும் தமிழ்சமூகத்தினரின் இத் தலைவர்கள் நாடு சுதந்திரமடைந்த நாட் தொடக்கம் இன்றுவரை தாங்கள் நாட்டின் நிர்வாக சட்ட அதிகாரங்களில் பங்கு கொள்ள வேண்டின் மொழிக் கொள்கை முதலியவற்றை ஆதரித்தே தீரவேண்டுமென நம்பியுள்ளார்கள் இத்தகைய தன்மை துரதிர்ஷ்டவசமாக அனுபவம்மிக்க தமிழ் அரசியல் தலைவர்களையும் அவர்களது கட்சிகளையும் சுயநலவாதிகளாக்கியார் இலங்கைவாழ் தமிழ் மக்களின் தலைவர் எனப் போட்டியிடச் செய்துள்ளது இவ்வாறு தங்கள் சொந்த நலனின் பொருட்டு பாடுபடும் இவர்கள் நாட்டுக்கும் தங்கள் சமூகத்திற்கும் எது நன்மையாகும் என்பதை உணராது தமக்குத்தாமே தீங்கு தேடிக்கொண்டுள்ளார்கள்.

இந்த நிலைமையை நன்ருக நீங்கள் உணர்ந்திருந்தும் திரும்பவும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் உங்களிடம் வந்து இந்துப் பல்கலைக் கழகமே வேண்டும், எனவும் திரு. செல்வநாயகம் தமிழ் பல்கலைக்கழகமே வேண்டும் எனவும் கோருவார்கள் என எதிபர்ர்க்கிறீர்கள் அவர்கள் அவ்வாறு கோரியதும் பல்கலைக்கழக விஷயத்தில் தமிழ்மக்கள் மத்தியிலே கருத்து முரண்பாடுகளும் வேற்றுமைகளும் உள்ளன ஆதலால் தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவது சாத்தியமாகாது எனக் கூறி பல்கலைக்கழகத் தீர்மானத்துக்கே முற்றுப்புள்ளி வைக்க நினைத்துள்ளீர்கள்.

## முன்னர் ஏன் கோரவில்லை?

மனம் உண்டானுல் இடம் உண்டு. நீங்கள் மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியில் இருக்கும்பொழுது தமிழர்களின் நலன் குறித்து ஏதாவது செய்துள்ளீர்களா? அல்லது தற்போது அவர்களின் கருத்துக்களை கோரியிருந்தீர்களா? தனிச் சிங்களச் சட்டம் நீதிமன்ற மொழி மசோதா ஆகிய விஷயங்களில் தமிழ்மக்களைக்கலந்தாலோசித்துத்தான் நிறைவேற்றினீர்களா? இவை மட்டுமன்றி தமிழ் மொழி உபயோக விதிகள் ஆட்சி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிவாதிக்கப்பட்டபோது நீங்களாவது அல்லது உங்க அரசாங்கமாவது தமிழ் மக்களின் கருத்தைக் கோரினீர்களா? அல்லது இது சம்பந்தமாக சிங்களமக்கள் பலர் மத்தியில் எதிர்ப்பு இருந்தும் அவர்களைக் கலந்து ஆலோசித்தீர்களா?

இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் மற்றவர்களின் கருத்துக்களைக் கோருவது நியாயமானது என நீங்கள் கருதவில்லை. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் உங்கள் ஆட்சிமன்ற பெரும்பான்மையின் செல்வாக்கைப் பிரயோகித்து நீங்கள் நினைத்தபடி நடந்தீர்கள். ஆனுல் இப்போது குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் பொதுவாக 'சிங்கள பௌத்தர்கள்' லாதவர்களுக்கும் பல்கலைக்கழக வசதிகள் தாமதிக்காது செய்து கொடுக்க வேண்டியிருந்தும் இவ்விஷயத்தில் ஏன் தமிழ் மக்களின் கருத்தைக்கோரியுள்ளீர்கள். உயர்கல்வி பற்றி ஆராய ருேயல்கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்ட இவ்வேளையில் இவ்வாறு கருத்து கோரியுள்ளமை ஆச்சரியத்தை தருகிறது.

தமிழ் மக்களுக்கு பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாகத் தமிழ்மக்களின் கருத்துக்களை அறிய முற்பட்டுள்ளீர்கள். ஆனுல் நீங்களாவது உங்கள் அரசாங்கமாவது தமிழர்களுக்கு எத்தனை பல்கலைக்கழகங்கள் நிறுவப்போகிறீர்கள் என்ருே அல்லது எத்தகைய பல்கலைக்கழகம் நிறுவப்போகிறீர்கள்என்ருே தெரிவிக்கவில்லை. அல்லது இவற்றிற்குச் சமமானவேறு வழிவகைகள் செய்து கொடுப்பது பற்றியோ கூறவில்லை.

தமிழர்களுக்குநீங்கள் ஒன்றும் வழங்கவில்லை. வேறு வழிவகைகள் பற்றியும் நீங்கள் ஆலோசிக்கவில்லை சகல தமிழர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவது போல் அவர்களிடம் இருந்து கருத்துக்களைக் கேட்டுள்ளீர்கள்.

## யாரை ஏமாற்ற பார்க்கிறீர்கள்?

கல்வியமைச்சரே! நீங்கள் யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள். ஏற்கனவே சிங்கள மக்கள் உங்கள் மீது வெறுப்புற்றுள்ளார்கள். பௌத்த சங்கத்தை உதாசீனப்படுத்தி அதன் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளீர்கள். பத்திரிகைகளைக் காரசாரமாகத் தாக்[...] கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்துள்ளார்கள். உங்களால் ஏமாற்றப்பட தமிழர்கள் மட்டுந்தான் விடப்பட்டுள்ளார்கள்என நினைக்க வேண்டாம். அப்படி நினைத்தால் சிலவேளைகளில் சில தமிழர்களைத்தான் நீங்கள் ஏமாற்றலாம். ஆனுல் தொடர்ந்து எல்லாத் தமிழர்களையும் எல்லாக்காலமும் ஏமாற்றலாம் என நீங்கள் நினைக்கக்கூடாது. தேர்தல் நெருங்குகின்ற நேரத்தில் அதாவது நல்ல நேரத்தில் நீங்கள் உங்கள் நியாயமான தீர்மானத்தை தமிழ் மக்களுக்கு வெளியிட்டுள்ளீர்கள் தாமதமின்றி அதைச்செயல்படுத்துங்கள்,

எனது கடிதத்தை வாசித்துவிட்டு தமிழர்களுக்கு எத்தகைய பல்கலைக்கழகங்கள் தேவை என நான் கூருதுவிட்டால் அதையே சாக்காகக் கொண்டு பல்கலைக் கழக விடயத்தில் நடவடிக்கைகள் எடுக்காது விட்டுவிடுவீர்கள். ஆதலால் இவ்விடயத்தில் நீங்கள் ஆராய்வதற்குச் சில யோசனைகளைத் தெரிவிக்கிறேன்.

## எத்தகைய பல்கலைக்கழகம்

பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கு ஒவ்வொரு தமிழ் மாணவனுக்கும், சிங்கள மாணவனுக்கும் சம உரிமைகளும் வசதிகளும் அளிக்கப்படவேண்டும். இத்தகைய சம உரிமையைப் பெற தற்போதுள்ள இரு பொதுப்பல்கலைக்கழகங்கள், இரு பௌத்த பல்கலைக்கழகங்களோடு தமிழர்களுக்கும் இரு பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டும்,

(1) இந்துபல்கலைக் கழகம்.
(2) தமிழ் பல்கலைக் கழகம்.

இரு தமிழ் மாகாணங்களிலும் ஒவ்வொன்ருக இப் பல்கலைக் கழகங்களை நிறுவுதல் நன்மை பயக்கும். நான் கூறியவாறு நீங்கள்மேற்படி இரு பல்கலைக்கழகங்களையும் தமிழ் மக்களுக்குக் கொடுத்தீர்களானல் தமிழர்களுக்கும். இந்துக்களுக்கும் பல்கலைக்கழக விடயத்தில்இழைத்தஅநீதி அழிவதோடு மட்டுமன்றி தமிழர்களின் இரு பெருங் கட்சிகளான தமிழரசுக் கட்சியும் தமிழ்காங்கிரசுக் கட்சியும் தங்கள் கோரிக்கைகளையிட்டு அரசாங்கத்தைக் குற்றம் சுமத்துதலும் நீங்கிவிடும். இப்பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு அரசாங்கத்துக்குப் போதிய நிதிவசதியில்லையேல் எங்களுக்கு அங்கீகாரம் வழங்கினுல் நாங்கள் நிதி சேகரித்துக் கொடுப்போம். பல்கலைக்

மேலும் ஏதாவது ஒரு வித பல்கலைக்கழகமும் தமிழ்மக்களுக்கு தேவையற்றது எனக் கூறும் எந்த அரசியல் கட்சியினதும் ஆலோசனையின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவேண்டாம்.

ஏனெனில் இத்தகைய ஆலோசனைகள் அரசியல் போட்டிக்காகவே கூறப்படுகின்றன என நீங்கள் அறிவீர்கள். இவ்விடயத்தில் அரசியல்கட்சிகள் தாம்பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்களின் கருத்தைத்தான் கூறுகின்றனர் என்பது சரியல்ல; இக்கருத்துக்கள் தமிழ் மக்களுக்கோ, சிங்கள மக்களுக்கோ அல்லது நமது நாட்டிற்கோ உண்மையில்நன்மை பயக்கக் கூடியன எனவும் ஏற்கமுடியாது.

கடைசியாக உங்களதும் உங்கள் தேசிய உயர் கல்விச் சபையினதும் வேலை தமிழ் மக்களுக்குக் கொடுத்தவாக்குறுதியை நிறைவேற்றி கொடுத்து அதன்மூலம் உங்கள்மேல் உள்ள குற்றச்சாட்டுக்கள் உண்மையல்ல என்பதை நிரூபிக்க வேண்டும்.

## தெட்சணாமூர்த்தி

சென்னை, டிச 26

தியாகராய நகர் ஸ்ரீ கிருஷ்ண கானசபா இசைவிழா நிகழ்ச்சியில் வரும் 29-ம் திகதி யாழ்ப்பாணம் தவில்வித்துவான் திரு. தெட்சணாமூர்த்தி, நாதஸ்வர வித்துவான் ஷேக் சின்ன மௌலானு சாகிப்புக்கு தவில்வாசிக்கிருர்

## தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் திரு. எம். புவனேந்திரன் இதுபற்றி விளக்கம் கொடுக்குமுகமாகத் தாம் தலைமைதாங்கிச்செல்லவிருக்கும் ஒரு தூது கோஷ்டி கல்வி அமைச்சரைப் பேட்டி காணுவதற்கான ஒரு தினத்தைக் குறிப்பிடுமாறும் கோரியுள்ளார். பேட்டியில் தமிழ் மொழி மூலம் வர்த்தகக் கல்வி, புதிய வர்த்தக ஆசிரியர் நியமனம் போட்டிப் பரீட்சைகளில் வர்த்தக பாடங்களைச் சேர்த்தல் முதலிய விடயங்களைப் பற்றித் தெளிவாக்க இருப்பதாக திரு. புவனேந்திரன் கூறினுர்.

## தேவை

ஈழநாடு ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு ஓர் பியோன் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org